Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 057 | வெள்ளிக்கிழமை, | தை 9 ஆம் நாள் 22 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# ஐ.நாவில் இலங்கைக்கு இம்முறை கிடுக்குப்பிடி!

**மிகக் காட்டமான அறிக்கையை சமர்ப்பிக்க ஆணையாளர் முடிவு**

யாழ்ப்பாணம், ஜனவரி 22

ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக மிகக்காட்டமான அறிக்கையை ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் சமர்ப்பிக்கவுள்ளார். 19 ▶

## கொரோனா பரவல் இலங்கையில் தீவிரம்

*தொற்றில் இருந்து மீண்ட தயாசிறி தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுக்கடங்காமல் பரவியுள்ளது. பொதுமக்கள் 19 ▶

## கிழக்கு பல்கலை. மாணவிகளுக்கு தொற்று

மட்டக்களப்பு, ஜன.22

மட்டக்களப்பு, வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பல்கலைக் கழக விடுதியில் 19 ▶

## 887 பேருக்கு தொற்று உறுதி

*இருவர் உயிரிழப்பு*

கொழும்பு, ஜன.22

இலங்கையில் நேற்று மட்டும் 887 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என 15 ▶

## நிலாவரையில் தொல்பொருளா?

**திணைக்களத்தினர் திடீர் ஆராய்வு**

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் புத்தூர் நிலாவரை கிணற்றுக்கு அருகில் தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்றுக் காலைமுதல் திடீர் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டனர். அந்தப் பகுதியில் தொல்பொருள் 19 ▶



## பாம்பு தீண்டி ஒருவர் சாவு!

சாவகச்சேரி, ஜன.22

மீசாலை தெற்கில் ஒருவர் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந் 19 ▶

## வடக்கில் நேற்றும் 6 பேருக்குத் தொற்று

*ஒருவர் பல்கலை. மாணவி*

யாழ்ப்பாணம், ஜன.22

வடக்கில் நேற்று 6 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் 19 ▶

## எச்சில் துப்பியவருக்கு ஆறு ஆண்டுகள் சிறை!

கொழும்பு, ஜன.22

சுகாதாரப் பரிசோதகர் மீது எச்சில் துப்பியவருக்கு ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 2ஆம் திகதி களுத் 19 ▶

## கடற்படை மீது கொலை வழக்கு; தமிழகத்தில் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன.22

இலங்கைக் கடலில் காணாமல் போயிருந்த தமிழக மீனவர்களில் இருவரின் உடல் நேற்று மீட்கப்பட்டன. இதையடுத்து படகில் இருந்த நால்வரும் உயிரிழந்துள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, நான்கு மீனவர்களின் சாவுக்கும் கார 19 ▶

## கார் – பஸ் விபத்தில் மூவருக்குக் காயம்!



யாழ்ப்பாணம், ஜன.22

யாழ். நகரப் பகுதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகில் நேற்றிரவு நடந்த விபத்தில் மூவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இலங்கை போக்குவரத்துச் சபையின் வென்னப்புவ சாலைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், கார் ஒன்றுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. 20 ▶

## தடுப்பூசியைக் காட்டி மக்களை ஏமாற்றாதீர்!

*அரசிடம் ரணில் வலியுறுத்து*

கொழும்பு, ஜன.22

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டங்களை தயாரிக் 15 ▶

## அமெ. அழுத்தத்தை குறைக்க புதிய மனித உரிமைத் திட்டம்!

*அரசுக்கு ஆலோசனை கூறுகிறார் மஹாநாம*

கொழும்பு, ஜன.22

ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தால் இலங்கை மீது பிரயோகிக்கப்படும் எதிர்கால அழுத்தத்தைக் குறைக்க உடனடியாக தேசிய மனித உரிமைத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். இவ்வாறு பேராசிரியர் மஹாநாம ஹேவா தெரிவித்துள் 15 ▶

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# தென்மராட்சியில் உண்ணிக் காய்ச்சலால் பாதிப்போர் அதிகரிப்பு

## சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி,ஜன. 22

**தென்மராட்சி பிரதேசத்தில் மழைவெள்ளம் குறைந்து செல்லும் நிலையில் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
இரண்டு தினங்களுக்கு மேல் காய்ச்சல் காணப்படின் கொரோனா அச்சத்தை தவிர்த்து அருகில் உள்ள அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ளவும்.
பிரதேசத்தில் வெள்ளம் வற்றியதையடுத்து பற்றைகள் துப்புரவு செய்வோர் மற்றும் கால்நடை பராமரிப்போர் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. விரைவில் நெல் அறுவடை ஆரம்பமாகும் நிலையில் தனிநபர் சுகாதாரம் பேணப்படாத நிலையில் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.
கடந்த 20 நாள்களில் உண்ணிக் காய்ச்சலால் 22 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.
பற்றைகள் துப்பரவு செய்வோர் மற்றும் கால்நடைகள் பராமரிப்போர் வேலை முடிந்து வந்ததும் கிணற்றடிக்குச் சென்று அணிந்துள்ள ஆடைகளைக் களைந்து கழுவிய பின்னர் தாங்களும் நன்றாகக் குளித்து துப்பரவான நிலையில் வீடுகளுக்கு செல்லுமாறும், கால்நடைகள் வளர்ப்போர் கால்நடைகளை நன்றாக சுத்தமாக வைத்திருப்பதுடன் கால்நடைகளைக் கட்டும் இடத்துக்கு தினமும் கிருமிநாசினி விசிறவும் வேண்டும் - என்றார். (ஐ-9)

# சாராயம் விற்றவர் கைது!

கொடிகாமம், ஜன. 22
வரணி மாசேரிப் பகுதியில் வீட்டில் வைத்து சாராயம் விற்ற நபர் ஒருவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
180 மில்லி லீற்றர் சாராயத்தை குறித்த நபர் வீட்டில் வைத்து விற்பனை செய்கின்றார் என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம159)

# 225 பேருக்கு கொரோனாத் தொற்று

மட்டக்களப்பு, ஜன.22
காத்தான்குடி பொலிஸ் பிரதேசத்தில் 225 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமை இனங்காணப்பட்டுள்ளது.
குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளிலேயே இவர்களுக்கு தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.
கொரோனாப் பரவல் காரணமாக காத்தான்குடி பிரதேசம் மறு அறிவித்தல் வரை ஒரு மாத காலமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ரி5-இ)

# மன்னார் மாவட்டத்தில் கொரோனா தீவிரம்; அடுத்துவரும் வாரங்கள் தீர்மானம் மிக்கன

## மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஜன. 22
மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் நேற்று முன்தினம் நள்ளிரவு வரை 117 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே அடுத்துவரும் வாரங்கள் தீரமானம் மிக்கவை. மக்கள் ஒத்துழைப்புத் தந்தால் கொரோனாச் சங்கிலியை எம்மால் உடைக்கமுடியும் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
மன்னாரில் நேற்றுச் செய்தியாளர்களை சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதேஅவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மாவட்டத்தில் இந்த மாதம் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த 20 நாள்களில் மாத்திரம் 100 கொரோனாத் தொற்றாளர்கள் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையின்படி மன்னார் மாவட்டத்தில் 30 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனவே பொதுமக்களிடமும் வியாபார நிலையங்களின் உரிமையாளர்களிடமும் நாங்கள் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். பொதுமக்கள் தேவையற்ற விடயங்களுக்கு நகரப் பகுதிகளுக்குள் வருவதையும், தேவையற்ற விதத்தில் வியாபார நிலையங்களில் ஒன்றுகூடுவதையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். முக்கியமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணிதல், கைகழுவல் போன்றவற்றை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். அடுத்த 4 வாரங்கள் வரை மக்கள் இந்த நடைமுறைகளைப் பின்பற்றினால் தொற்றுச் சங்கிலியை உடைக்க முடியும் என்றார். (ம-ஐ-56)

# 90 கிலோ பன்றி இறைச்சி; சந்தேகத்தில் இருவர் கைது

கொடிகாமம்,ஜன.22
90 கிலோ பன்றி இறைச்சியை உழவு இயந்திரத்தில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் மிருசுவில் வடக்கு பகுதியில் வைத்து இவர்கள் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.
இவர்களிடமிருந்து பன்றி இறைச்சி மற்றும் உழவு இயந்திரம் என்பனவற்றை பொலிஸார் கைப்பற்றினர்.
சந்தேகநபர்களை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

ஆதன உரிமப் பெயர் மாற்றங்களுக்கு

# யாழ். மாநகர சபையில் விரைவு சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 22
கட்டட அனுமதி மற்றும் ஆதன உரிமப் பெயர் மாற்றம் என்பவற்றுக்கான விரைவு சேவையை யாழ்ப்பாண மாநகர சபை ஆரம்பித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் மாநகர சபை அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:
யாழ்ப்பாண மாநகர சபையின் பௌதிகத் திட்டமிடல் பகுதியால் வழங்கப்படும் கட்டட அனுமதிகளை விரைவு சேவையில் பெற்றுக்கொள்வதற்கு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பூர்வாங்க திட்டமிடல் அனுமதியுடன், ஆதன உரிமையாளரின் பெயருடைய உறுதி, ஆதனவரிப் பற்றுச் சீட்டு, உரிமையாளரின் அடையாள அட்டை பிரதி, குழாய்க்கிணறு அறிக்கை, மற்றும் யாழ் மாநகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட நிலஅளவை வரைபடம் என்பவற்றுடன் விண்ணப்பித்து சகல உறுதிப்படுத்தும் ஆவணங்களும் சமர்ப்பித்து அதற்கான விசேட கட்டண அறவீடுகளைச் செலுத்தும் பட்சத்தில் பௌதிக திட்டமிடல் குழுவினரால் அவை பரிசீலிக்கப்பட்டு, யாழ் மாநகர சபையின் விதிமுறைகளனைத்தும் பூர்த்திசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் 5 வேலை நாள்களுக்குள் அனுமதி வழங்கப்படும்.
கோவைகள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களிலும் பொறுப்பேற்கப்படும்.
அத்துடன் ஆதன வரிப் பகுதியால் மேற்கொள்ளப்படும் ஆதன உரிமப் பெயர் மாற்ற அனுமதியை விரைவு சேவையில் பெற்றுக் கொள்வதற்கு, குறித்த ஆதன இலக்கத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் அலுவலகத்துக்கும் சமூகமளித்து வரிமதிப்புப் பதிவேடுகளில் பெயர்களை உட்புகுத்துவதற்குரிய உரித்துறுதியின் வரலாற்றுத் தொகுப்புப் படிவத்தைப்பெற்று உரிய முறையில் பூரணப்படுத்தி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்றுள்ளது. (ம-ஐ)

# ஹெரோய்னுடன் நால்வர் கைது



வவுனியா,ஜன.22
வவுனியா ஆசிகுளம் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு பேர் வவுனியா பிராந்திய போதைத் தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
குறித்த பகுதியில் போதைப்பொருள் பயன்பாடு இடம்பெற்றுவருகிறது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அப்பகுதியில் சோதனைகளை முன்னெடுத்த பொலிஸார் 3 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை மீட்டுள்ளனர். அதனை உடைமையில் வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அதே பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-110)

# இலங்கை கிரிக்கெட் வீரர்கள் இருவருக்கு கொரோனா!!

கொழும்பு, ஜன.22
இலங்கை கிரிக்கெட் அணியின் இரண்டு வீரர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் மற்றும் ரி20 போட்டித் தொடர்களில் பங்கேற்பதற்காக பயிற்சி பெற்று வந்த இரண்டு வீரர்களே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த இரண்டு வீரர்களும் கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இவர்களுக்கு எவ்வாறு கொவிட் தொற்று ஏற்பட்டது என்பது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ற-இ)

# ஒட்டுசுட்டானுக்கென பிரதேச சபை வேண்டும்

## புதுக்குடியிருப்பு சபை உறுப்பினர் சத்தியசுதர்சன் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜன.22
முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவு பரப்பளவைக் கொண்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் தனிப் பிரதேச சபை அமைய வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் சதாசிவம் சத்தியசுதர்சன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 6 ஆயிரத்து 706 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 784 பேர் வாழ்கின்றனர். ஆனால் அங்கு தனிப் பிரதேச சபை இல்லை. புதுக்குடியிருப்பு பிரதேச சபையாலேயே ஒட்டுசுட்டான் பிரதேசம் நிர்வகிக்கப்படுகின்றது. தனிப் பிரதேச சபை உருவானால் பிரதேச அபிவிருத்தியில் சுயமாக முடிவெடுக்க முடியும். வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும். மக்கள் இலகுவாக பிரதேச சபையை அணுக முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக பரப்பளவைக் கொண்ட (618 கிலோமீற்றர்) பிரதேச செயலகமாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேச செயலாளர் பிரிவில் ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய இரு பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன. தனிப் பிரதேச சபை உருவானால் அரச நிதி ஒதுக்கீட்டை தனியாகப் பெற்றுக்கொள்ள முடியும். மக்களுக்கு இலகுவாக திருப்தியான சேவையை வழங்க முடியும். ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவை விட குறைவான மக்கள் தொகையைக் கொண்ட மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தனித் தனிப் பிரதேச சபைகள் இயங்குகின்றபோது ஒட்டுசுட்டானுக்கு மட்டும் தனிப் பிரதேச சபை, உருவாக்கப்படவில்லை. இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்ற போதிலும் ஒட்டுசுட்டானுக்கான தனிப் பிரதேச சபை அமைக்கப்படவில்லை -என்றார். (ப-ரீ2)

# யாழ்ப்பாணப் பாடசாலைகள் 10ஐ கொழும்பு அரசு உள்வாங்கியது!

யாழ்ப்பாணம், ஜன. 22

**வடக்கு மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட 10 பாடசாலைகளை கொழும்பு அரசின் - மத்திய அரசின் கீழ் உள்வாங்கும் வகையில் அவை தேசியப் பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.**

இதன்படி தீவக கல்வி வலயத்தில் 4 பாடசாலைகளும், வலிகாமம் கல்வி வலயத்தில் 4 பாடசாலைகளும், வடமராட்சி கல்வி வலயத்தில் 2 பாடசாலைகளும் தரமுயர்த்தப்பட்டுள்ளன.
ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, நெடுந்தீவு மகா வித்தியாலயம், காரைநகர் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, புத்தூர் சிறி சோமஸ்கந்தா கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம் ஆகியனவே இவ்வாறு தரம் உயர்த்தப்பட்டு கொழும்பு அரசுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன. (ஒ.இ)

பாடசாலைகள் ஆரம்பம்:

# உரிய சுகாதாரத் திட்டம் தயாரித்தல் அவசியம்

கொழும்பு, ஜன.22
மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பெப்ரவரியில் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் சரியான சுகாதாரத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
தற்போது திறக்கப்பட்டுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் சரியான சுகாதார வழிமுறைகள் இல்லை என்று, சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (ச-இ)

# வீதியோர வியாபாரம் பாதிப்பு; வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்



திருகோணமலை, ஜன.22
திருகோணமலையில், வீதியோர வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, வியாபாரிகளால் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
கண்டி வீதியில் மட்டக்களி மீன் வியாபாரிகளது உடைமைகளை நகர சபையினர் கையகப்படுத்தி, அப்பகுதியில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்காததற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றுமுன்தினம் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
கொரோனா தாக்கத்தால் பொதுச்சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. அப்போது வீதியோரங்களில் வியாபாரம் செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் பலர் வீதியோர வியாபார நடவடிக்கைகளை இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர்.
எங்களிடமிருந்து நாள் ஒன்றுக்கு 100 முதல் 150 ரூபா வரை நகர சபையால் நிதி வசூலிக்கப்பட்டு பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டிருந்தது.
எனினும், திடீரென நகர சபையினால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் காரணமாக தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமது பிரச்சினைக்குத் தகுந்த தீர்வைப் பெற்றுத்தருமாறு வீதியோர வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# திண்மக் கழிவுகளுடன் வாகனம் மடக்கிப் பிடிப்பு

## இருவருக்கு எதிராக வழக்கு தாக்கல்

வலி.தென்மேற்கு, ஜன.22
இரவு நேரத்தில் வீதியில் கொட்டுவதற்காக திண்மக் கழிவுகளை 'டிப்' ரக வாகனத்தில் ஏற்றி காக்கைதீவு வழியாகச் சென்ற இருவர் அங்கு மறைந்திருந்த பொதுமக்களிடம் மாட்டிக்கொண்டனர்.
இதுகுறித்து மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு விரைந்த பொலிஸார் வாகனத்தைக்கைப்பற்றிபொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதுடன் சாரதி உட்பட இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
வலி.தென்மேற்கு, காக்கைதீவு திண்மக்கழிவு வளாகத்தை அண்டியுள்ள பகுதிகளில் இரவு நேரங்களில் ஒருசிலர் மலக்கழிவு மற்றும் திண்மக் கழிவுகளை வாகனத்தில் ஏற்றி வந்து வீதிகளில் கொட்டி விட்டுத் தப்பிச் செல்வது வழக்கம். கடந்த சனிக்கிழமை இரவு எட்டு மணியளவில் நவாலி சோமசுந்தரம் வீதியில் கொட்டுவதற்காக "டிப்" ரக வாகனத்தில் திண்மக் கழிவுகளை ஏற்றி வந்த இருவரே பொதுமக்களால் பிடிக்கப்பட்டனர். இது குறித்து பிரதேச சபை தவிசாளருக்கு மக்கள் அறிவித்தனர். தவிசாளர் தலைமையில் அங்கு விரைந்து சென்ற உறுப்பினர்கள் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அங்கு சென்ற பொலிஸார், திண்மக்கழிவுகளுடன் நின்ற "டிப்" ரக வாகனத்தைக்கைப்பற்றி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதுடன் சாரதி உட்பட இருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (ப-115)







# கிளி.அரச உயர் அதிகாரிகளுக்கு வேள்ட் விசன் நிறுவனம் பாராட்டு

கிளிநொச்சி, ஜன. 22
வேள்ட் விசன் நிறுவனத்தால் கரைச்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைத்த அரச உயர் அதிகாரிகளைப் பாராட்டும் நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.
வேள்ட் விசன் நிறுவனத்தால், 2020ஆம் ஆண்டு கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைத்த மாவட்டச் செயலகம், மற்றும் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு இதன்போது நன்றி தெரிவிக்கப்பட்டது.
குறித்த நிகழ்வில் 2021ஆம் ஆண்டு புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள வேள்ட் விசனின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது. அத்தோடு நிறுவனத்தின் புதிய ஊழியர்களும் அறிமுகம் செய்யப்பட்டனர்.
இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக செயலர் சிறிமோகன், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள், கரைச்சி பிரதேச சபையினர், வேள்ட் விசன் நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ப-6)

# யாழில் சில பொதுச் சந்தைகளில் நாளாந்தக் கட்டணம் அதிகரிப்பு

## வியாபாரிகள் கவலை

சாவகச்சேரி, ஜன. 22

**பொதுச் சந்தைகள் மீண்டும் திறக்கப்பட்டபின்னர் சில சந்தைகளில் நாளாந்தக் கட்டணங்களை குத்தகையாளர்கள் அதிகரித்துள்ளனர் என்று சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் வியாபாரிகள் தெரிவித்ததாவது;

கொரோனாத் தொற்றுக் காரணமாக சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது. இந்த நிலையில் சந்தையில் நாளாந்தம் வியாபாரிகளிடம் அறவிடப்படும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சபையின் தவிசாளரால் குத்தகையாளர், உற்பத்தியாளர் மற்றும் வியாபாரிகளிடம் அறவிடவேண்டிய நாளாந்தக் கட்டண விவரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கட்டணத்தை விட கூடுதலாகக் குத்தகையாளரால் அறவிடப்படுகிறது. சந்தைக் கடலுணவு விற்பனை அலகில் கடந்த வருடம் குத்தகையாளரால் அறவிடப்பட்ட கட்டணத்தை விட தற்றுபோது இரு மடங்கு அறவிடப்படுகிறது என்றனர்.

இது தொடர்பாக சபைகளின் உறுப்பினர்களிடம் கேட்டபோது; ஒரு கிலோ 300 ரூபாவுக்கு வாங்கும் கடலுணவுகளை கிலோ 600 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றனர். கூடுதல் கட்டணம் செலுத்துவதில் தவறில்லை, கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த வருடம் சந்தையைக் குத்தகைக்கு எடுத்தவருக்கு நட்டம் ஏற்பட்டதால் இவ்வருடம் கட்டணத்தை அதிகரித்துள்ளார் என்றனர்.

சந்தைகள், குத்தகைக்கு வழங்கப்படும்போது உற்பத்தியாளர் வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் ஆகியோருக்கு பாதிப்பு ஏற்படக்கூடாது என ஒப்பந்தம் செய்துள்ள நிலையில் சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் குத்தகையாளருக்கு ஆதரவாகச் செயற்படுவது குறித்தும் உற்பத்தியாளர்கள், நுகர்வோர், மற்றும் வியாபாரிகள் கவலை தெரிவித்தனர். (ஐ-9)

# புத்துவெட்டுவான் குளத்தின் கலிங்கை உடைப்பெடுக்காதவாறு சீரமையுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.22

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான் குளம் உடைப்பெடுக்காதவாறு அதன் கலிங்கை சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 2019 ஆம் ஆண்டு மாரி காலத்தில் கலிங்கு உடைத்து குளத்து நீர் வெளியேறியது. நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் இருக்கும் இந்தக் குளத்தின் கலிங்குப் பகுதி கடந்த வருடம் சீர்செய்யப்பட்டது. அதன் பின்னர் அந்த வருடமே டிசெம்பர் மாத மழையின் போது மீண்டும் கலிங்கு உடைப்பெடுத்தது. இதன்போது 200க்கும் மேற்பட்ட மண் மூடைகளால் உடைப்பு மறிக்கப்பட்டது. எனினும் கடந்த வாரங்களில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக மீண்டும் கலிங்கு உடைப்பெடுத்து நீர் வெளியேறுகின்றது. இதனால் எமது விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. 14 அடி கொள்ளளவு வரை நீர்தேங்கக் கூடிய இந்தக் குளத்தின் கீழான நீர்ப்பாசனத்திலிருந்து 250 விவசாயக் குடும்பங்கள், 5 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் 8 அடி உயரமான இந்த கலிங்கு உடைப்பெடுப்பதால் எங்கள் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளான நிலையில் உள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள், இதனை மீண்டும் உடைப்பெடுக்காத வகையில் உறுதிப்பாடுள்ளதாக சீர் செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (ஐ-ரி)

# வான் பாய்ந்தாலும் வெள்ளம் வயல்களுக்குள் செல்லாது

## கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜன.22

அக்கராயன் குளத்தின் வான் வெள்ளம், வயல் வெளிகளுக்குள் செல்லாதவாறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.ரிசியந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; அக்கராயன் குளத்தின் வான் பகுதியில் இருந்து நீர்த் தடுப்பணைப் பகுதிகளுக்கு இடையில் நீர்த்தடைகளை அகற்றியிருந்தோம். தாழ் பாலத்தில் இருந்தும் மிகக் குறுகிய தூரம் ஆற்றைத் துப்புரவு செய்திருந்தோம். இதன் காரணமாக வான் வெள்ளம் ஒரு சீரான இடைவெளியில் வெளியேறியது. சமாதானபுரம் வயல் வெளிகளுக்குள் நீர் பரவவில்லை. ஆனால் அக்கராயன் தாழ் பாலத்தில் இருந்து குடமுருட்டி வரையான எட்டு கிலோமீற்றர் வரையான அக்கராயன் ஆறு துப்பரவு செய்யப்பட வேண்டும். இதற்கு முதலில் 3 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது. இந்த ஆறு துப்புரவு செய்யப்படாததன் காரணமாகவே கண்ணகைபுரம் போன்ற வயல் நிலங்கள் ஆண்டு தோறும் நீரில் மூழ்கி, விவசாயிகள் அழிவுகளை எதிர்கொள்கின்றனர் என்றார்.

இதேவேளை நெற்செய்கைக் கூட்டங்களை நடத்துகின்ற அதிகாரிகளிடம் அக்கராயன் குளத்தின் கீழான விவசாயிகள் அக்கராயன் ஆற்றைத் துப்புரவு செய்து ஆண்டு தோறும் வான் வெள்ளத்தால் பெருமளவில் அழியும் நெல்லைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி2)

# வவுனியாவில் 250 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை!

வவுனியா,ஜன.22

வவுனியா கந்தசாமி கோவில் வீதி மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், மற்றும் ஊழியர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

வவுனியா நகர்ப்பகுதியில் எழுமாறாக நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 55 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகரின் ஒரு பகுதி கடந்த சில நாள்களாக முற்றாக முடக்கப்பட்டது. இதனையடுத்து வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவுகளும் கிடைக்கப்பெற்றன.

இதுவரை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளாத ஊழியர்கள் மற்றும் வர்த்தகர்கள் என 250 பேருக்கு நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் வைத்து அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படுபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

குறித்த நடவடிக்கைகளுக்கு வவுனியா வர்த்தக சங்கமும் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-110)

# ஆறுமுகத்தான் குளம் யாருக்குச் சொந்தம்?

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளத்தை அடாத்தாக குமுழமுனை மக்கள் சொந்தம் கொண்டாடி வருகின்றனர் என்று தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளத்தைச் சேர்ந்த மக்கள் கரைதுறைப் பற்று பிரதேச செயலருக்கு முறைப்பாட்டு மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அந்த மனுவில் உள்ளதாவது;

தண்ணிமுறிப்பு கிராம அலுவலர் பிரிவில் ஆறுமுகத்தான்குளம் உள்ளது. குமுழமுனையில் குமுழமுனை மேற்கு, கிழக்கு, மத்தி எனப் பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் குமுழமுனை மேற்குப் பகுதி மக்களே தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளம் தமக்கு சொந்தமானது என பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றார்கள். தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் கிராம அலுவலர் பிரிவில் 115 குடும்பங்கள் வாழ்கின்றன. ஆவணங்கள், குடும்ப அட்டைகள், காணிக்கான ஆவணங்கள், தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு உள்ள நிலையில், குமுழமுனை மேற்கு மக்கள் ஆறுமுகத்தான் குளத்தை உரிமை கோர முடியாது. எனவே இது தொடர்பில் பிரதேச செயலகம் உரிய நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (ப)

# கொவிட்டால் உயிரிழந்தவரின் சடலம் வவுனியாவில் தகனம்

வவுனியா.ஜன 22.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலம் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் தகனம் செய்யப்பட்டது.

மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த 61 வயதுடைய முஸ்லிம் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.



இருதய நோயாளியான இவர் மன்னார் பொது மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை உயிரிழந்தார். அவரது மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள நகர சபையால் பராமரிக்கப்பட்டு வரும் மின் மயானத்தில் நேற்று தகனம் செய்யப்பட்டது. (ஐ-110)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாற்றுவழிகளே தேவை

ராஜபக்சக்களின் அதீத அதிகாரப் பலம் கொண்ட ஆட்சியின் செயற்பாடுகள் அனைத்துமே தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் மிகவும் கடுமையான விமர்சனப் பார்வைக்குட்படத் தொடங்கியுள்ளன. இதனை அண்மைக்காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் உலகச் செய்திகள் உறுதிசெய்து வருகின்றன.

மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான விடயங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, அதனை எவ்வாறு எதிர்கொண்டு சமாளிப்பது என்பது தொடர்பாகப் பல தரப்பினராலும் தீவிரமான கருத்தாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய சூழலில்கூட அரசு நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு எதிரானதும் பேரினவாத மேலாதிக்க சிந்தனையின் பாற்பட்டதுமான, புதிய அரசியல் நகர்வுகளை தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறது. மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் கண்டனங்களையோ, கோரிக்கைகளையோ இலங்கை அரசு சிறிதளவேனும் கவனத்திற்கொள்வதாக இல்லை என்ற செய்தியையே இந்த நடவடிக்கைகள் உணர்த்துகின்றன.

இது அரசின் எதிர்கால வலுவான இருப்புக்கும், உறுதித்தன்மைக்கும் ஆரோக்கியமானதல்ல. எனினும் அரசு சிறுபான்மைச் சமூகத்தவர் தொடர்பான இன, மத, மொழி விரோதக் கொள்கைகளில் இருந்து சிறிதளவேனும்கூட விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்பதையே இத்தகைய நகர்வுகள் உறுதிசெய்கின்றன. நீதி, நியாயம், நல்லிணக்கம், சுமுகமான தீர்வு போன்ற சொற்கள் அரசின் பௌத்த தர்மக் கோட்பாடுகளுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும் வகையிலானவையோ தெரியவில்லை. அரசு அது குறித்து எந்தச் சிந்தனையும் மனதில் கொண்டிருப்பதாகவும் புலப்படவில்லை.

நீண்டகாலமாகத் தேசிய ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ராஜபக்ச அரசு மூலம் எந்த வகையிலும், நீதி கிடைக்க வாய்ப்பு இல்லை என்ற அடிப்படையிலேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்து அமைந்துள்ளது என்றே கூற முடியும். நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் போன்றவற்றில் இருந்து விலகிக்கொண்டு, பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்று அரசு எண்ணினால், அது தனது அதிகார வலுவைப் பயன்படுத்தி ஒரு சர்வாதிகாரத்தன ஆட்சிக்கு தயாராகுகின்றது என்றே அர்த்தப்படும்.


ஏற்கனவே இலங்கையில் ஏகப்பட்ட பிரச்சினைகள். அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து, தீர்வுகாணுமாறு பல தரப்புகளும் வலியுறுத்தி வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களின் நகர்வுகள் மேலும் புதியபுதிய பிரச்சினைகளையே உருவாக்குகின்றன. இதன் மூலம், தமது பேரினவாதச் சிந்தனைகளுக்கு அதிகாரத் தரப்பு வலுச்சேர்க்க முனைவது வெளிப்படை. அத்தோடு இத்தகைய சிக்கலான நகர்வுகளால் அரசு சிறுபான்மை சமூகத்தவரின் நீதிக்கான குரலை மேலும்மேலும் உதாசீனம் செய்கின்றது.

குறிப்பாக அரசின் மறைமுகத் தலையீடு மற்றும் மறைகர அழுத்தங்கள் என்பன நீதி நிர்வாகத்துறையின் சுயாதீனச் செயற்பாட்டுக்கு நெருக்கடிகளை கொடுப்பனவாக பல தரப்பினராலும் வெளிப்படையாகவே சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு, நீதியான தீர்வினைக் காணும் முயற்சிகள் பாரபட்சமற்ற முறையில் முன்னெடுப்பதென்பது சாத்தியமில்லை.

நாடாளுமன்றத்தில் அல்லது சர்வதேச விசாரணை அமர்வுகளில் குரல் கொடுப்பதன் மூலமும், அறிக்கைகள் சமர்ப்பிப்பதன் மூலமும் முன்வைக்கப்படும் நீதிக்கான கோரிக்கைகள் எவையும் தீர்வுகளைப் பெற்றுத் தரப்போவதில்லை. அப்படிப் பெற்றுத்தந்தாலும் அது அர்த்தமும் ஆரோக்கியமானதும் மனித உரிமைகளின் மனித நேயத்தின் அடிப்படையிலானதுமான தீர்வாக இருக்காது.

அனைத்துப் பிரச்சினைகள் தொடர்பானதுமான பேச்சுக்கள், அதிகாரப் பொறிமுறைகள், விவாதங்கள், சர்வதேச சபை அமர்வுகள் என அனைத்துமே வெறுமனே சம்பிரதாயபூர்வமானவையாகத் தொடர்ந்தும் இருக்குமெனில்.... அதற்கான மாற்று வழி குறித்துத் தீர்க்கமாக யோசிக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகள் யாவும் எக்காலத்திலும் தீர்க்கப்படாத வெறும் பேசுபொருளாக மட்டுமே இருக்கும்.

## இன்றைய கருத்தோவியம்




## குருந்தூர்மலை விவகாரம்;

# சிங்கள மயமாக்கலின் அடுத்தகட்ட நகர்வே

ரவிகரன் சீற்றம்

**முல்லைத்தீவு, ஜன.22**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பாதுகாப்புப் படையினர் போன்ற தரப்புக்கள் மற்றும் வெலி ஓயா, மகாவலி குடியேற்றத் திட்டங்கள் போன்ற பல வழிகளிலும் ஏற்கனவே ஆக்கிரமிப்புக்களும் சிங்கள மயமாக்கல் செயற்பாடு களும் இடம்பெற்று வருகின்றன. குருந்தூர் மலை விவகாரம் இவற்றின் அடுத்த கட்டமே.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து ரவிகரன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் கோவில் இந்துமக்கள் காலாதிகாலமாக வழிபட்டுவந்த தலமாகும். இந்த இந்து ஆலயத்தின் அடையாளங்கள் யாவும் தற்போது அழிக்கப்பட்டுள்ளன. அங்கு அரசின் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வந்து தொல்லியல் ஆய்வுக்கென ஆரம்ப நிகழ்வை முன்னெடுத்துள்ளார். அப்போது அங்கே இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. எனினும் நீதிமன்றக் கட்டளையில் குறிப்பிட்டதைப்போல யாழ் பல்கலைக்கழக தொல்லியல் பீட மாணவர்களோ, அல்லது யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களோ யாரும் அழைக்கப்படவில்லை. எல்லாமே சிங்கள மயமாகக் காட்சியளித்திருந்தது. நாம் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல. சிங்கள இனவாதிகளுக்கு எதிராகவும், இனவாதக் கருத்துக்களை வெளியிடுபவர்களுக்கு எதிராகவுமே எமது கருத்துக்களை வெளியிடுகின்றோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் ஆய்வு என்ற பெயரில் அடுத்தகட்ட சிங்களமயமாக்கல் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்றே எம்மால் பார்க்க முடிகின்றது. எமது தமிழர்களின் நிலங்கள், ஆறுகள், குளங்கள், கடல் என அனைத்து வளங்களும் சொத்துக்களும் அபகரிக்கப்படுகின்றன. இதற்கு உலக நாடுகள் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளன?. நிச்சயமாக இந்த விடயத்தில் இந்தியா உட்பட பன்னாடுகள் தலையிட்டு எமது பிரச்சினைக்கு தீர்வுகளைப் பெற்றுத்தரவேண்டும் - என்றார். (பு-246)

# தம்மிக்கவின் மருந்துப் பாணி தடையின்றி தாராள விநியோகம்

கொழும்பு. ஜன. 22

சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள, தம்மிக்கவால் தயாரிக்கப்பட்ட மருந்துப் பாணி நேற்றும் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது. கேகாலை நெலும்தெனிய உடுகும்புற பகுதியிலுள்ள அவரின் வீட்டுக்கு அருகில் பாணி பகிர்ந்தளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணி தொடக்கம் ஒன்றரை மணித்தியாலங்களாக மருந்துப் பாணி வழங்கல் இடம்பெற்றுள்ளது.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய அடையாளம் இடப்பட்டிருந்த இடத்திலிருந்து மக்கள் பாணியை பெற்றுக்கொண்டனர். பொலிஸாரின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தம்மிக்கவின் மருந்துப் பாணிக்கு கொரோனா எதிர்ப்பு சக்தி இருக்கிறது எனக் கூறி, கடந்த காலங்களில் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட ஆளும் தரப்பினருக்கும் இப்பாணி வழங்கப்பட்டிருந்தது. இதை அருந்திய சிலரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

# மலக் கழிவுகளை மீள் சுழற்சியிடல்

## மாவட்டச் செயலகத்தில் இன்று கலந்தாய்வு

சாவகச்சேரி ஜன. 22

**யாழ்.மாவட்டத்தில் விசேட செயற்றிட்டத்தின் கீழ் வலிகாமம் தெற்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைகள் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றில் ஆரம்பிக்கப்பட்ட மலக்கழிவுகளை மீள் சுழற்சியிடல் செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மாவட்டச் செயலக மண்டபத்தில் நடைபெறுமென மாவட்டச் செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார்.**

கடந்த 2015 ஆம் ஆண்டு மாவட்டத்தில் விசேட செயற்றிட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபையின் தனங்களப்பு வீதியிலும், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகத்திலும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் முள்ளியிலும் மலக்கழிவு மீள்சுழற்சியிடல் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க மாவட்டச் செயலகத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்டது. மூன்று வேலைத் திட்டங்களையும் பெற்ற ஒப்பந்ததாரரால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மீள் சுழற்சியி டலுக்கான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையில், அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருந்தது. இதனால் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் மாவட்டச் செயலகத்தால் மீளப்பெறப்பட் டன. மலக்கழிவுகளை அகற்றும் வாகனங்கள் அரசால் கையளிக்கப்பட்ட நிலையில் கடந்த ஐந்து வருடங்களாக வேலைகள் இடம்பெறாததால் மாவட்டத்தில் தனியார் நிறுவனத்தால் அதிகரித்த கட்டணத்தில் கழிவுகள் அகற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

கட்டண அதிகரிப்புக் காரணமாக உள்ளூராட்சி சபைகளை இந்தத் திட்டத்தை ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ப-9)

## மருத்துவமனை சிற்றூழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம்



திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனை சிற்றூழியர்கள் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்துள்ளனர். மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களை முதலில் அவர்களே கையாளுகின்றபோதும், அதற்குப் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மருத்துவமனை நிர்வாகம் பெற்றுத்தரவில்லை எனத் தெரிவித்து அவர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர். பாதுகாப்பு அங்கிகள், கையுறைகள், முகக்கவசங்கள் என்பவை அரசாங்கத்தாலோ மருத்துவமனை நிர்வாகத்தினாலோ தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும் தமது சொந்தச் செலவிலேயே இவற்றைப் பெற வேண்டிய நிலைக்குத் தாம் தள்ளப்பட்டுள்ளனர் எனவும், சிற்றூழியர்களுக்காக அரசால் வழங்கப்பட்டுள்ள நீல நிற அங்கியைக்கூட மருத்துவமனை நிர்வாகம் இன்னமும் வழங்கவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். சமூக இடைவெளியைப் பேணி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் திருகோணமலை பொது மருத்துவமனையில் பணிபுரியும் அனைத்து சிற்றூழியர்களும் பங்கேற்றிருந்தனர். (வ-இ)

## 20 பிரதேச சபைகளில் 25 வேலைத் திட்டங்கள்!

சாவகச்சேரி, ஜன.22

வடக்கு மாகாணத்தில் கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 20 பிரதேச சபைகளில், 25 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு, காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சாவகச்சேரி, வடமராட்சி தெற்கு, வடமராட்சி மேற்கு, பருத்தித்துறை, கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைதுறைப்பற்று, துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, வவுனியா தெற்கு ஆகிய பிரதேச சபைகளில் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளத் தலா 15 இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (ற-9)



## இளையோருக்கான பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி,ஜன.22

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஜெயந்திநகர் கிராமத்தில் உயர்கல்வி கற்று தொழில் வாய்ப்பு இல்லாது காத்திருக்கும் 30 இளையோருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர் சிறிமோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பயிற்சிக்கான அனுசரணையை ஐ.ஓ.எம். நிறுவனம் வழங்கியது. (ஐ-6)

## பிரபாகம் சஞ்சிகை வெளியீடு

வன்னேரிக்குளம்,ஜன.22

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் 'பிரபாகம் என்ற சஞ்சிகை நூல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

ஆசிரியர் சி.உதயகுமாரின் வழிகாட்டலின் கீழ் தரம் 8 மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி 'பிரபாகம்' சஞ்சிகை வெளியிடப்பட்டது.

நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-ரி2)



## சி.மூ இராசமாணிக்கத்தின் 108 ஆவது ஜனனதினம்



மட்டக்களப்பு, ஜன.22

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் சி.மூ. இராசமாணிக்கத்தின் 108 ஆவது ஜனனதினம் நேற்றுமுன்தினம் நினைவு கூரப்பட்டது. களுவாஞ்சிக்குடியில் அமைந்துள்ள அவரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து நினைவு கூரல் நிகழ்வு இடம் பெற்றுள்ளது. கடந்த 1952ஆம் ஆண்டு பட்டிருப்புத் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்றத்துக்கு தெரிவாகிய இவர், 1970ஆம் ஆண்டு வரை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவருடைய பேரனார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## வவுனியா தெற்கு வலயத்தில் மாணவர் வரவு 20 வீதமே

### பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா,ஜன.22

பாடசாலைகள் ஆரப்பிக்கப்பட்டுள்ள நிலையில், வவுனியா தெற்கு வலயத்துக்கு உட்பட்ட பல பாடசாலைகளில் மாணவர்களின் வரவு 20 வீதமாகவே காணப்படுகின்றது என்று வலயக்கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வவுனியா பட்டாணிசூர் மற்றும் நகர வியாபார நிலையங்களில் பணியாற்றும் பலருக்கு கொரோனாத் தொற்று உறுப்படுத்தப்பட்டது. இதனையடுத்து பல்வேறு பகுதிகள் முடக்கப்பட்டதுடன், பல பாடசாலைகளின் கல்விச்செயற்பாடுகளும் இடைநிறுத்தப்பட்டன. இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது; வவுனியா தெற்கு வலயத்தில் அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர் வரவு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. ஆனால் 80 வீதமான ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கின்றனர். செட்டிகுளம் பிரதேச பாடசாலைகளில் மாணவர் வருகை 50 வீதமாகக் காணப்படுகின்றது. எனினும் நகரக்கோட்டத்துக்கு உட்பட்ட பல பாடசாலைகளில் அது 20 வீதமாகவே காணப்படுகிறது.

அதிலும் நகரப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் மாணவர் வருகை 10 வீதமாகவே காணப்படுகின்றது - என்றார். (ஐ-110)

# நீதிமன்ற கட்டளைக்கு அமைய செஞ்சோலைக் காணி அளவீடு

கிளிநொச்சி, ஜன.22

**கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் இறுதிப் போருக்கு முன்னர் செஞ்சோலை சிறுவர் இல்லம் அமைந்திருந்த காணி நேற்று முன்தினம் நில அளவைகள் திணைக்களத்தால் அளவீடு செய்யப்பட்டது**

செஞ்சோலை சிறுவர் இல்லம் அமைந்திருந்த காணியில் இறுதிப் போர் முடிந்து பின்னர் இராணுவதினர் முகாம் அமைத்து நிலைகொண்டிருந்தனர். கடந்த ஆட்சியின் போது அந்தக் காணி இராணுவத்தால் விடுவிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. போர்க் காலத்துக்கு முன்னர் செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தில் இருந்து, போருக்குப் பின்னர் காணிகள் அற்றவர்களாக இனங்காணப்பட்ட 54 பேர் அந்தக் காணியில் 2019ஆம் ஆண்டு குடியேறினர். ஆயினும் அந்தக் காணி தமக்குரியது எனவும், அதற்குரிய ஆவணங்கள் தம்மிடம் உள்ளன என்றும் பொதுமக்கள் சிலர் மாவட்டச் செயலகத்தில் முறையிட்டனர். குறித்த காணி அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ளது எனவும், காணியில் குடியிருக்கும் மக்களை வெளியேறுமாறும், கரைச்சி பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டு, காணி அளவீடு செய்வதற்காக நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கு சென்றிருந்தனர்.



எனினும் அங்கு குடியமர்ந்துள்ள குடும்பங்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராடினர். இதனை அடுத்து நில அளவீடு நிறுத்தப்பட்டது. அரச காணியில் அனுமதியின்றிக் குடியிருக் கும் மக்களுக்கு எதிராக கரைச்சி பிரதேச செயலாளரால் கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில், நீதிமன்றத்தின் கட்டளைக்கமைவாக நேற்று முன்தினம் செஞ்சோலைக் காணி நில அளவைத் திணைக்களத்தால் அளவீடு செய்யப்பட்டது. (ப-ரி1)

## சீரற்ற காலநிலை மாற்றமடையும்

கொழும்பு, ஜன. 22

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை அடுத்த சில நாள்களில் மாற்றமடையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சிறிதளவில் மழை பெய்யும் எனவும், அத் திணைக்களம் தெரிவித்தது.

சப்ரகமுவ மாகாணத்திலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும், பல இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படும் என அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என்பதால், மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு மேலும் வளிமண்டலவி யல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ரி5-இ)

## ரயில்கள் மூலம் எரிபொருள் வழங்கலை அதிகரிக்க முடிவு

கொழும்பு, ஜன.22

எரிபொருளை எடுத்துச் செல்வதற்காக கடந்த வருடம் ரயில்வே திணைக்களம் 28 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தற்போது 32 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனை 40 சதவீதம் வரை அதிகரிப்பது இலக்காகும் என்றும், இதன் மூலம் சுற்றாடல் மாசடைதல், வாகன நெரிசல் மற்றும் அதிகரித்த செலவீனம் போன்றவற்றைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ற-இ)



யாழ். பாதுகாப்பு படைகளின் புதிய கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் பியந்த பெரேரா கடந்த செவ்வாய்க்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் யாழிலுள்ள சர்வ மதத் தலைவர்களை நேற்றுமுன்தினம் சந்தித்தார். (ரி5)

## அரச புலனாய்வுப் பிரிவினர் என்ற போர்வையில் வழிப்பறிக்கொள்ளை

### அச்சத்தில் மக்கள்

கொடிகாமம் ஜன 22

தென்மராட்சிப் பகுதியில் இராணுவப் புலனாய்வுத் துறை மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் எனத் தம்மைக் கூறிகொண்டு பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிளில் நடமாடும் குழுவினர் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடுகின்றனர் என்று பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

சாவகச்சேரி, செம்மணி வெளி, ஏ-32 வீதி, நாவற்குழி, சங்குப்பிட்டி, தனங்களப்பு வீதி, கைதடி ஆகிய பகுதிகளில் பெண்கள் தனியாக செல்லும்போது அந்தக் குழுவினர் சங்கிலி அறுப்பில் ஈடுபடுகின்றனர் என்றும், வியாபாரிகளிடம் பணம் பறிக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாக இந்தச் செயற்பாட்டில் இருவர் ஈடுபட்டுள்ளனர் என்றும், இதனால் தனியாகப் பெண்கள் நடமாட முடியாத நிலையில் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் அப்பகுதி சமூக மட்ட பிரதிநிதிகள் தெரியப்படுத்தியும், சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்படுகிறது.

குறித்த குழுவினர் என்று தங்களை அறிமுகப்படுத்தியவர்கள், கடந்த வாரம் கைதடி, நாவற்குழிப் பகுதியில் தனியாகச் சென்ற பெண் ஒருவரின் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றனர் என்றும், மீன் வியாபாரி மற்றும் நல்லெண்ணெய் விற்பனை செய்யும் நபர்களை கஞ்சா கொண்டு செல்கின்றீர்கள் என்று தமக்கு தகவல் கிடைத்துள்ளது; உங்களைப் பரிசோதிக்க வேண்டும் என்று கூறி பரிசோதித்து விட்டு அவர்களின் கைப்பையில் இருக்கும் பணத்தை அபகரித்தனர் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. (ப-159)

## சைகை மொழியை அங்கீகரித்தது அரசு

கொழும்பு, ஜன.22

இலங்கையில் சைகை மொழியை அங்கீகரிக்கப்பட்ட மொழியாக நிறுவுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ளது. இதன்படி, சைகை மொழியை ஒரு முறையான தகவல் தொடர்பு வழிமுறையாகவும், முறையான தொடர்பாடல் ஊடகமாகவும் அங்கீகரிக்க, பொருத்தமான வகையில் நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் தேவையான ஏற்பாடுகளை தயாரிக்கவும், அதற்கான சட்டமூலத்தை தயாரிக்க சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கவும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இலங்கையில் குறிப்பிடத்தக்க அளவு செவிப்புலனற்றவர்கள் வாழ்கின்றமையால், அவர்களுடைய கல்வித் தேவைகள், சட்ட அணுகுமுறைகள், சுகாதார வசதிகள், பலதரப்பட்ட அரச சேவைகள் மற்றும் தனியார் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது சைகை மொழியை அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் ஊடகமாக ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைத் தயாரிப்பதன் மூலம் செவிப்புலனற்ற சமூகத்தவர்களை வலுவூட்ட முடியும் என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

## முன்னாள் போராளி ஒருவர் ஜெர்மனியில் தண்டிக்கப்படலாம்

### அந்த நாட்டு ஊடகங்கள் ஊகம்

கொழும்பு, ஜன.22

இலங்கையில் குண்டுத் தாக்குதல் ஒன்றுடன் தொடர்புடைய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளி ஒருவருக்கு ஜெர்மனியில் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என ஜெர்மனியின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

2018 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இருந்து அரசியல் தஞ்சம் கோரி ஜெர்மன் சென்ற குறித்த நபர் தனது வாக்குமூலத்தில் இலங்கையில் குண்டு வெடிப்பு ஒன்றைத் தான் நிகழ்த்தினார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இராணுவ வாகனத் தொடரணி ஒன்றை இலக்கு வைத்து தானியங்கி மூலமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்தத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகள் டசல்ஃபோர்ட் நீதவான் நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த நிலையில் அவருக்கு 10 ஆண்டுகள் வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என அந்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ப)

# நீதிமன்றத்தின் தீர்ப்பை எங்கேயும் விமர்சிக்கலாம்!

## லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜன. 22**

**நீதிமன்றத் தீர்ப்பை நாடாளுமன்றத்தினுள்ளும் சரி வெளியேயும் சரி விமர்சிக்க முடியும். ஏனைய நாடுகளிலும் நீதிமன்றத் தீர்ப்புக்கள் விமர்சிக்கப்படுகின்றன. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதம கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**



ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ உரையாற்றிக் கொண்டிருந்தபோது, சபை முதல்வர் தினேஸ் குணவர்த்தன குறுக்கீடு செய்தார். நீதிமன்றத் தீர்ப்புக்களை விமர்சிப்பது நிலையியற் கட்டளைகளுக்கு முரணானது என்று தெரிவித்திருந்தார். இதன்போது லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது:

நீதிமன்றத் தீர்ப்புக்களை விமர்சிக்க முடியும். ஆனால் நீதிபதிகளை விமர்சிக்க முடியாது.

3 மாதங்களுக்கு முன்னர் இந்தியாவில் நீதிபதி ஒருவர் பிரதம நீதியரசரை மோசடிக்காரர் என்று தெரிவித்திருந்தார். அதற்காக அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு ரூபா தண்டமாகும். அதனையும் அவர் செலுத்த மறுத்துள்ளார். தற்போது அந்தத் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இன்று நீதிமன்றத் தீர்ப்புக்களை விமர்சிப்பது பேச்சு சுதந்திரத்துக்கு சமமாகவே செல்கின்றது. ஆரம்பகாலங்களிலேயே நீதிமன்றங்களை விமர்சிப்பது மிகவும் பாரதூரமான குற்றமாக இருந்தது. உலகில் அந்த நடைமுறை தற்போது எங்கும் இல்லை. நீதிமன்றங்களால் தவறான தீர்ப்பு வழங்கப்படும்போது அதனை திருத்தியமைக்க ஜனாதிபதிக்கு முடியும்.

அன்று ஞானசார தேரருக்கு நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியபோது, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்தத் தீர்ப்பின் கடுமையை உணர்ந்து அவருக்கு பொது மன்னிப்பு வழங்கினார்.

நீதிமன்றங்களில் இருப்பதும் எம்மைப்போன்ற மனிதர்கள்தான். அவர்களும் தவறிழைக்கலாம். அதற்காகத்தான் மேன்முறையீடுகள் செய்யப்படுகின்றன. ரஞ்சன், நாட்டில் இருக்கும் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளில் அதிகமானவர்கள் ஊழல்வாதிகள் என்றே தெரிவித்தார்.

அதற்கு ஒரு உதாரணத்தை தெரிவிக்கின்றேன். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், என்னை பிரதமர் நீதியரசர் பதவியில் இருந்து நீக்கவேண்டாம். உங்களுக்கு தேவையானமுறையில் வழக்குத் தீர்ப்புக்களை வழங்குகிறேன் என தெரிவித்திருந்தார். அதனையே ரஞ்சன் தெரிவித்திருக்கின்றார்.

அதேபோன்று சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டியவர் அரசு ஆசனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்திருந்தார். நீதிமன்ற தீர்ப்புக்கள் தொடர்பில் விமர்சிப்பதை சிலர் ஆதரிக்கின்றனர். சிலர் எதிர்க்கின்றனர். அதனை விளங்கிக்கொண்டு நாங்கள் செயற்படவேண்டும்= என்றார். (ஒ.இ)

# நீதிமன்ற தீர்ப்பு தொடர்பில் எம்.பிக்கள் எவரும் பேசலாம்

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 22

நீதிபதிகளின் தீர்ப்புக்கள் குறித்து பேசுவதற்கு நாடாளுமன்றில் உள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதிகாரம் உள்ளது என்று நாடா ளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 'மக்களின் நீதிசார்ந்த அதிகாரங்கள் நாடாமன்றத்தின் ஊடாகவே நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்மையால் தீர்ப்புக்கள் குறித்து விமர்சனங்களை முன்வைப்பதற்கு நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது. நீதிபதிக ளின் தனிப்பட்ட விடயங்கள் அல்லாது அவர்களால் வழங்கப்படும் தீர்ப்புக்கள் குறித்தே விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவர்களால் பெற்றுக்கொடுக்கப்படும் தீர்ப்புக்கள் குறித்துப் பேசுவதற்கு நாடாளுமன்றில் உள்ள 225 பேருக்கும் அதிகாரம் உள்ளது' என்றார். (ஒ.இ)

# பட்டதாரிப் பயிலுநர்கள் விடுமுறை பெறுவது எப்படி?

***பிரதேச செயலரால் திணைக்களத் தலைவர்களுக்கு கடிதம்***

யாழ்ப்பாணம் ஜன. 22

தென்மராட்சி பிரதேச அரச துறைகளுக்கு இணைக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் விடுமுறை மற்றும் வரவு அறிக்கை தொடர்பான கடிதம் தென்மராட்சி பிரதேச செயலரால் பிரதேச திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த செப்ரெம்பர் 2ஆம் திகதி தொடக்கம் பட்டதாரிப் பயிலுநர்களாக இணைக்கப்பட்டு, இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பயிற்சிக்காக பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்களில் இணைக்கப்பட்டு பயிற்சி பெற்று வரும் பட்டதாரிப் பயிலுநர்களுக்கான விடுமுறை மற்றும் வரவு அறிக்கை தொடர்பான கடிதமே இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில்;

மருத்துவக் காரணங்களுக்காக மட்டும் ஒரு மாதத்துக்கு கூடியது இரண்டு நாள்கள் விடுமுறை பெற முடியும், மருத்துவக் காரணங்கள் தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக பெறப்படும் விடுமுறைகள், மற்றும் ஒரு மாதத்துக்கு இரண்டு நாள்களுக்கு அதிகமாகும் வகையில் பெற்றுக் கொள்ளப்படும் விடுமுறைகள் சம்பளமற்ற விடுமுறையாக அனுமதிக்கப்பட முடியும். குறித்த பயிலுநர்களால் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்ளப்படின், சம்பளமற்ற விடுமுறை அனுமதி பெற்ற கடிதம், மாதாந்த வரவு அறிக்கையுடன் இணைக்கப்பட்டு பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். குறித்த பயிலுநர்களின் மாதாந்த வரவு அறிக்கையை மாதத்தின் நான்காம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ப-9)

ஜனாஸா விவகாரத்தில்

# புத்தரின் போதனைகளை அரசு பின்பற்றவில்லையே?

## கேள்வி எழுப்புகிறார் முஜிபுர்

கொழும்பு, ஜன. 22

கொரோனாவால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் அரசு, புத்தரின் போதனைகளின் பிரகாரமோ, விஞ்ஞான ரீதியிலான தீர்மானத்தின் பிரகாரமோ செயற்படவில்லை. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவால் உயிரிழப்பவர்களை எரிக்கலாம் என்று உதய கம்மன்பில குர்ஆன் தொடர்பில் பிழையான கருத்தை தெரிவித்திருக்கின்றார். அது முழுக்க முழுக்கத் தவறானது.

அரசு பௌத்த சிந்தனையின் பிரகாரம் செயற்படுவதும் இல்லை. தான் அமைத்த விசேட மருத்துவர் குழுவின் தீர்மானத்துக்கமைய செயற்படுவதும் இல்லை.

விசேட மருத்துவர் குழு அடக்கம் செய்வதற்கு அனுமதி அளித்திருக்கின்றது. அதனை அரசு மறைத்து வருகின்றது. அதனால் அரசு எத்தகைய சிந்தனையில் செயற்படுகிறதென்று யாருக்கும் தெரியாமல் இருக்கின்றது. என்றார். (ஒ.இ)

# மஹிந்தானந்தவின் வழக்கு பெப். 3 இல்

கொழும்பு, ஜன.22

சட்டமா அதிபரால் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் மேலதிக சாட்சி விசாரணை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என கொழும்பு மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, நீதிவான் ஆதித்ய கடபெதியே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கை சுதந்திர தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்துக்குரிய 39 லட்சம் ரூபா பணத்தை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழே, அமைச்சர் மஹிந்தானந்தவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ற-இ)

# தடுப்பூசி பரீட்சார்த்த நடவடிக்கை அடுத்த வாரம் ஆரம்பம்



கொழும்பு, ஜன. 22

இலங்கையில் அடுத்த வாரத்தில் கொரோனா தடுப்பூசி வழங்குவது பற்றிய பரீட்சார்த்த செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். தடுப்பூசிகள் கிடைத்ததன் பின்னர் அவற்றை எப்படி மக்களுக்கு வழங்குவது என்பது பற்றிய முன்னோட்ட கட்டங்கள் அடுத்தவாரம் தொடக்கம் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.இ)

# அச்சுறுத்தல்களை புறந்தள்ளி நீதிபதிகள் செயற்பட வேண்டும்

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 22**

**நீதிபதிகள் தமது பொறுப்பை நிறைவேற்றும்போது வெளி நிர்வாகம், அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல்களை பொருட்படுத்தாமல் செயற்பட வேண்டும் என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்தார்.**

குமுதினி விக்ரமசிங்க, ஷிரான் குணரத்ன மற்றும் திலீப் நவாஸ் ஆகிய மூன்று புதிய உயர் நீதிமன்ற நீதியரசர்களை வரவேற்கும் வைபவம் உயர் நீதிமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே சட்டமா அதிபர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுயாதீன நீதிமன்றத்தின் மூலமே ஜனநாயக சமூகத்தில் சட்ட ஆட்சி நிலவும். நீதிமன்றத்தை செயற்படுத்தும் நீதிபதிகளுக்கு அமைவாக நாட்டின் நீதிமன்ற கட்டமைப்பு மீதான நம்பகத் தன்மை தங்கியுள்ளது. நீதிபதிகள் நேர்மைக்கும் சுயாதீனத் தன்மைக்கும் எந்தத் தருணத்திலும் பங்கம் விளைவிக்காமல், மனச்சாட்சிப்படி பணிகளை நிறைவேற்ற வேண்டும்.


ஜனநாயக அரச பொறிமுறையில் சட்டத்தின் பிரகாரம் செயற்படுவதற்காக பக்கச்சார்பற்ற, சுயாதீன நீதிமன்றம் அவசியம் - என்றார். (ஓ.இ)

# மாணவர்கள் கடத்தல்: வழக்கு பெப். 19இல்

கொழும்பு, ஜன. 22

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்று கப்பம் பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவத்தில், பிரதிவாதிகளான முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னாகொட உள்ளிட்ட 14 கடற்படையினருக்கு எதிரான வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க சிறப்பு ட்ரயல் அட்பார் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டனர்.

கொரோனா காரணமாக கடந்த நாள்களில் குறித்த வழக்கு விசாரணை தடைப்பட்டிருந்த நிலையிலேயே, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அவ்வழக்கை விசாரணைக்கு எடுக்கவும், அது தொடர்பில் பிரதிவாதிகள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் அறிவிக்கவும் நீதிமன்ற பதிவாளருக்கு நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப்பித்தது. (ஓ.இ)



# 12 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜன.22

வெள்ளவத்தை சந்தையில் பணியாற்றிய 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்தச் சந்தை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என வெள்ளவத்தை சுகாதார மருந்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

சில தினங்களாக வெள்ளவத்தைப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது.

கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் வெள்ளவத்தை பகுதியில் 23 பேர் தொற்றுடன் இனங்காணப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# பாகிஸ்தான் பிரதமரின் பயணம்: இந்தியாவைச் சீண்டுகிறதா சீனா?

கொழும்பு, ஜன. 22

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளார் என 'ஒரே வீதி ஒரே ஒழுங்கை' சீன திட்டத்தின் இலங்கைக்கான ருவிற்றர் பக்கத்தில் பதிவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் பாகிஸ்தான் பிரதமர் இலங்கைக்கு வருகை தரத் தயாராகியுள்ளார் என உத்தியோகபூர்வ மூலத்தை மேற்கோள்காட்டி அந்த ருவிற்றர் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 'ஒரே வீதி ஒரே ஒழுங்கை' சீன செயற் றிட்டத்தின் கீழ் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பொருளாதார பாலம் ஒன்றைத் திட்டமிடும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. விமான, ரயில், தரை வழி ஊடாக பயணிக்கக் கூடிய இந்தச் செயற்றிட்டத்துக்காக 68 பில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சீனா, பாகிஸ்தான் ஒன்றிணைந்த கைத்தொழில், முதலீடு உள்ளிட்ட பல செயற்றிட்டங்கள் இதனூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஓ.இ)

# நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

தனிமைப்படுத்தல் சட்ட ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்காத 103 நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, 910 நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது, இவற்றில் 807 நிறுவனங்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைச் சரியான முறையில் பின்பற்றுகின்றன எனக் கண்டறியப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித்ரோஹண தெரிவித்தார். தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றத் தவறுகின்ற அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ரி5-இ)

# விண்ணப்பம் கோரல்

நல்லூர், ஜன. 22

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டுக்கான எழுத்தாளர் ஊக்குவிப்பு செயற்றிட்டம் (நூல் கொள்வனவு) மற்றும் தேசிய கையெழுத்துப் பிரதிப்போட்டி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பான சுற்றுநிருபம் மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியன கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விண்ணப்பத்துக்கான கால எல்லை எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதி மற்றும் மார்ச் 10ஆம் திகதி ஆகும். நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இலக்கியத்துறை சார்ந்த கலைஞர்கள் குறித்த போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும். (ரி5)

# அவசிய உணவுப் பொருள்கள் 2022க்குள் உள்ளூரில் உற்பத்தி

## அமைச்சர் மஹிந்தானந்த உறுதி

கொழும்பு, ஜன.22

2022 ஆம் ஆண்டுக்குள் பெரும்பாலான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். விவசாயத்துறை அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

விவசாயத்துறையை மேம்படுத்த அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. விவசாயத்துறை தொடர்பில் தேசிய கொள்கையை வகுக்க 14 துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு கடந்த மாதம் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் இன்னும் ஆறுமாத காலத்துக்குள் விவசாயத்துறை தொடர்பான தேசிய கொள்கை வெளியிடப்படும். மேலும் பெரிய வெங்காயம், பச்சைமிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டளவில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பல உள்ளூர் மட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (வ-இ)

# கடந்த 24 மணி நேரத்தில் 18 பேர் கைது

கொழும்பு, ஜன. 22

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியால இடைவெளிக்குள் 18 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ரி5-இ)

# மீண்டும் வாகன இறக்குமதி: அரசுடன் பேச்சுக்குத் தயார்

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.22

வாகனங்கள் இறக்குமதியை மீண்டும் ஆரம்பித்தல் தொடர்பில், அரசாங்கத்துடன் கூட்டு உடன்பாட்டை எட்டும் நோக்குடன் எதிர்வரும் வாரங்களில் உயர் மட்ட அரச அதிகாரிகளுடன் கலந்துரையாட இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இது குறித்து இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். கே. கமகே, கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிடுகையில்,

கொரோனாத் தொற்று காரணமாக கடந்த ஆண்டு முதல் இலங்கையில் வாகன இறக்குமதிக்கு அரசாங்கம் தடைவிதித்திருந்தது. இந்த நிலையில், வாகன இறக்குமதிகள் மீண்டும் தொடங்குவது குறித்து உறுதியான முடிவை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

வாகன இறக்குமதி தடையால் வாகனங்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில், இறக்குமதியாளர்களுக்கும், அரசாங்கத்துக்கும் பயனளிக்கும் ஒரு உடன்படிக்கைக்கு வர நாம் தயாராக உள்ளோம். வரி, வருமான இழப்பு என்பவை காரணமாக அரசாங்கத்தால் ஏற்பட்ட பெரும் இழப்பை கணக்கில் எடுத்துக்கொண்டு, மாற்றுத் தீர்வுகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்றார். (ந-இ)

சுற்றுச்சூழல் பாதிப்பு:

## குழு நியமிக்க முடிவு

கொழும்பு, ஜன. 22
முத்துராஜவல சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் தொடர்பில் ஆய்வு செய்வதற்காக குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
சுற்றாடல் அமைச்சு, வனப்பாதுகாப்பு, வனஜீவ ராசிகள் திணைக்களம், சுரங்கப் பணியகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டு இந்தக் குழு நியமிக்கப்படவுள்ளது என மேலும் அமைச்சர் தெரிவித்தார். (ரி5-இ)



# பாலியல் வன்முறை; சட்டங்களில் திருத்தம்

அனுமதி வழங்கியது அமைச்சரவை

**கொழும்பு, ஜன.22**
**பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளுக்கு எதிரான குற்றவியல் சட்டக் கோவையிலுள்ள ஏற்பாடுகளை திருத்தம் செய்ய நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

குற்றவியல் சட்டக் கோவையின் 363 ஆம் உறுப்புரையின் கீழ் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை கடுமையான குற்றச் செயலாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச் செயலின் கீழ் குறித்துரைக்கப்படும் குற்றங்கள் தொடர்பாக குற்றவியல் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சட்டரீதியாக பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைக்கு ஏற்புடைய சட்டத்தில் மாறுபாடுகள் காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது. மேலும், இலங்கை சட்ட மருத்துவர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கற்கையில் சட்டரீதியாக பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளுக்கு ஏற்புடைய குற்றவியல் சட்டக் கோவையிலுள்ள ஏற்பாடுகளை திருத்தம் செய்ய வேண்டிய தேவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையடுத்தே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-இ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன.22
களனி வனவாசல பகுதியில், சுமார் 20 மில்லியன் ரூபா பணம், மோட்டார் சைக்கிள் மற்றும் கைத் துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொழும்புக் குற்றத் தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (ற-இ)



## கொரோனாவிலிருந்து குணமடைந்தார் தயாசிறி

கொழும்பு, ஜன. 22
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர குணமடைந்து நேற்று வீடு திரும்பி யுள்ளார்.
தயாசிறி தனது முகநூலில், சிகிச்சையளித்த மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், கொரோனா தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் பதிவையும் பதிவிட்டுள்ளார். (ஒ.இ)

## சுகாதார விதிகளை மீறினால் சுற்றுலாவிகளுக்கும் சட்டம் பாயும்



கொழும்பு, ஜன. 22
சுற்றுலாப் பயணிகள் சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை சுற்றுலாத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
சுற்றுலாப் பயணிகளுக்காக நேற்று இலங்கை திறக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆறு மாத காலப் பகுதிகளுக்குள் சுற்றுலாத் துறையை பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இந்த நிலையில், கொவிட் தொற்று நிலைமை தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்டால் பயண முகவர் நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)

புதிய அறிகுறி தொடர்பில்

## தெளிவு தேவை!



கொழும்பு, ஜன.22
கொரோனாத் தொற்று தொடர்பாக தற்போது ஏற்பட்டுள்ள புதிய அறிகுறிகள் குறித்து பொதுமக்கள் தெளிவாக இருக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.
குறிப்பாக நாக்கில் ஏற்படுகின்ற புதிய அறிகுறிகள் பற்றிய தெளிவான விளக்கத்தை மக்கள் பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (ற-இ)

# வளங்கள் வீணாவதை அனுமதிக்க முடியாது

வலியுறுத்துகிறார் கொழும்பு பேராயர்



கொழும்பு, ஜன.22
நாட்டின் வளங்கள் வீணடிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. மக்களின் மனிதாபிமான முன்னேற்றத்தை பாதுகாப்பதற்காக குரல் கொடுக்க வேண்டியது தலைமைத்துவம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயம் என கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.
மேலும், சரியானதையும் பிழையானதையும் செய்வதற்கு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதோ, எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்பதோ, எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதோ முக்கியமல்ல. சரியானதைச் செய்வதே அவசியம். ஆனால் மனச்சாட்சி படிப்படியாக மரணிப்பதே இங்கு இடம்பெறுகின்றது. உண்மையை பொய்யென மாற்றுவதற்கு முயற்சிக்கின்றனர். எனினும், சத்தமிடுவதால் உண்மை பொய்யாகிவிடாது என பேராயர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## போதைக்காக சிறுநீரகம் விற்பனை

கொழும்பு, ஜன.22
பேலியகொட பகுதியைச் சேர்ந்த ஒருவர் போதைப் பொருளை கொள்வனவு செய்ய தனது சிறுநீரகத்தை விற்றுள்ளார் என மஹரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர். திருட்டுச் சம்பவம் தொடர்பில் இந்த நபர் கைதுசெய்யப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது எனவும் இவரிடமிருந்து 2 கிராம் 150 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

இலங்கை உற்பத்திகளுக்கு

# ஒஸ்திரியாவில் சந்தை வாய்ப்பு

கொழும்பு, ஜன.22
ஒஸ்திரியாவில் இடம்பெறும் இலங்கையின் 73வது சுதந்திர தின வைபவத்துக்கு அமைவாக, ஒஸ்திரியாவில் விற்பனை செய்யக்கூடிய இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் 30 பொருள்களுக்கு போட்டிமிகு விநியோகஸ்தர்களை கவருவதற்கு அந்நாட்டிலுள்ள எம்.டி.சி எக்ஸோடிக் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
எம்.டி.சி எக்ஸோடிக் வர்த்தகத் தொகுதியின் ஒத்துழைப்புடன் இலங்கையின் தயாரிப்புகளை எந்தவித செலவுகளுமின்றி வியன்னாவில் உள்ள நகர் மத்திய நிலையத்தில் காட்சிப்படுத்துவதற்கான வசதிகளை செய்வதற்கு அங்குள்ள இலங்கைத் தூதரகம் தற்பொழுது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் இலங்கை உற்பத்திக்கு ஒஸ்திரியாவில் புதிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியுமென நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## பத்து மாதங்களின் பின்னர் விமான நிலையம் திறப்பு

கொழும்பு, ஜன. 22
இலங்கையில் சுமார் 10 மாதங்களுக்குப் பின்னர் விமான நிலையங்கள் நேற்று திறக்கப்பட்டுள்ள நிலையில், முதல் விமானம் ஓமானில் இருந்து வந்துள்ளது. ஓமானில் இருந்து குறித்த வணிக விமானம் நேற்றுக் காலை 07.40 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. இந்த விமானத்தில் சுமார் 50 இலங்கையர்கள் நாட்டுக்கு திரும்பியுள்ளனர். இவர்கள் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி5-இ)

## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் திட்டத்துக்கு குடும்பத்தில் இருந்த எதிர்ப்புகள் அடங்கும். பலகாலம் திட்டமிட்டவாறு புதிய வீட்டில் குடியேறுவீர்கள்.

**இடபம்:** பிரச்சினை ஒன்று தீரும். திருமணம் பற்றிய பேச்சு வார்த்தையில் கவனமாக இருங்கள். பிரச்சினைக்கு நீங்கள் காணும் தீர்வில் அனுபவ அறிவு வெளிப்படும்.

**மிதுனம்:** உறவினர் குடும்பத்தில் நடக்கும் விசேஷத்துக்குச் செல்வீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வழக்குகள் முடியும். நண்பர் ஒருவரின் வழிகாட்டுதலால் வாழ்வு சிறக்கும்.

**கடகம்:** சமீபத்தில் அறிமுகமான நண்பரிடம் மிகவும் கவனமாயிருங்கள். நல்ல திட்டம் ஒன்றுக்கு அருமையான சந்தர்ப்பம் கூடிவரும். கூட்டாளிகள் ஒத்துழைப்பார்கள்.

**சிம்மம்:** காலையிலேயே நற்செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இளைஞர்கள் முயற்சி செய்து நல்ல நிலையை அடைவீர்கள். எண்ணம் வெற்றி பெறும்.

**கன்னி:** தடைகள் ஏற்பட்டால் பொறுமையுடன் கையாளுங்கள். அவசரப் பேச்சினால் தொல்லைக்குட்படாமல் கவனம் தேவை. கடந்த நாள்களை விட நல்ல நாள். மனநிம்மதி உண்டாகும்.

**துலாம்:** தாயாருடன் பிணக்கு நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பேச்சில் நிதானமும், இதமும் கூடுதலாகும். நற்பெயர் கூடும். சவால்களை நிறைவேற்றி நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** தாமதமாகிய பதவி உயர்வு கிடைப்பது பற்றிய தகவல் வரும். உங்களின் திட்டம் நிறைவேற நல்ல சூழ்நிலை இருந்து வரும். புதிய வாய்ப்புகள் கிடைப்பதற்கு வழி வகை கிடைக்கும்.

**தனுசு** குடும்பத்தில் கவலை அளித்த ஒருவரின் உடல்நலம் சீரடையும். பெண் பணியாளர்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றி அடையும். கலையை கற்று மகிழ்வீர்கள்.

**மகரம்** ஆன்மிக நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். அனுபவசாலிகள், மூத்தவருடன் ஒற்றுமை நன்றாக இருக்கும். இழுபறி நீங்கிவிடும்.

**கும்பம்:** தடைகள் நீங்கி இன்று விரைவாகச் செயல்பட ஆரம்பிப்பீர்கள். தலைமை ஏற்று நடத்துமளவு உங்கள் செயல்பாடு அதிகரிக்கும். உங்களை அறியாமல் ஒரு உற்சாகம் தொற்றிக் கொள்ளும்.

**மீனம்:** சாமர்த்தியம் கூடும். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். உங்கள் பேச்சை மற்றவர்கள் மதித்து நடப்பார்கள். புதிய ஆடை, நகைகள் வாங்குவீர்கள். நிம்மதி அதிகரிக்கும்.



## எந்த சவாலையும் தீர்த்து வைப்போம்

### தமது கடமை என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஜன.22

எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நாட்டின் அரசாங்கம் என்ற ரீதியில் நாம் எமது கடமையை நிறைவேற்றுவோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பன்னிபிட்டிய, மாகும்புர பிரதேசத்தில் நிறுவப்பட்ட யோ பிரேண்ட் பாதணி தொழிற்சாலையை திறந்து வைத்து உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

குண்டூசியேனும் தயாரிக்காத நாடு என்று இனியும் நம்மை நாமே குறை கூறுவதில் பலனில்லை. இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பாடசாலை மாணவர்களுக்கான பாதணிகளை சந்தை விலையின் 30 சதவீதம் குறைவாக சதொச விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்புக் கிட்டும். எதிர்க்கட்சியினர் போன்று எங்களுக்கு வைரஸின் மூலம் அரசியல் செய்வதற்கான தேவையில்லை. நாட்டின் பாதுகாப்போ, தொற்று நெருக்கடியோ எதுவாகினும் நாம் எமது கடமையை நிறைவேற்றுவோம்.

மக்களின் நம்பிக்கையை எப்போதும் காப்பாற்றியுள்ளோம். சவால்களுக்கு முகங்கொடுத்தேனும் உள்ளூர் தொழில்முனைவோரை முன்னேற்றுவோம்- என்றார். (ந)

## 'கொவிஷீல்ட்' தடுப்பூசி அனுமதி விரைவில்!

இந்தியாவில் தயாரிக்கப்படும் கொவிஷீல்ட் தடுப்பூசிக்கான ஒழுங்குமுறை அனுமதி அடுத்த வாரத்தில் வழங்கப்படும் என தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகார சபையின் தலைமை அதிகாரி மருத்துவர் கமல் ஜயசிங்க தெரிவித்தார். இந்தத் தடுப்பூசியானது முதன் முதலில் பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார் மற்றும் ஷேசெல்ஸ் ஆகிய நாடுகளில் விநியோகிக்கப்படவுள்ளது என இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்தது.

இந்தத் தடுப்பூசிக்கு இலங்கை, ஆப்கானிஸ்தான், மொரீஷியஸ் ஆகிய நாடுகள் இன்னமும் ஒப்புதல் வழங்கவில்லை என்பதால் இந்த நாடுகளுக்கான விநியோகம் தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற-இ)

## மேல் மாகாண பாடசாலைகள் பெப்ரவரியில் ஆரம்பம்

கொழும்பு, ஜன.22

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

## ஏப்–21 தாக்குதல்: 10 பேர் விடுதலை

கொழும்பு, ஜன.22

கொழும்பு ஷங்ரிலா ஹொட்டலில் தற்கொலைக் குண்டுத்தாக்குதல் மேற்கொண்ட மொஹமட் இப்ராஹிம் இல்ஹாம் அஹமட்டின் செப்புத் தொழிற்சாலையில் பணிபுரிந்த 10 பேரை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் உள்ளிட்ட 7 இடங்களில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்திய சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட அடிப்படைவாதிகளுக்கு ஒத்தாசை வழங்கியமை தொடர்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் தொடர்ந்தும் வழக்கு விசாரணைகளை மேற்கொள்ள போதுமான சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் அறிவித்துள்ளார். இந்த விடயங்களை ஆராய்ந்த மேலதிக நீதவான் சந்தேக நபர்களை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்துள்ளார். (ந-இ)

## தீ மூட்டி உயிர்மாய்ப்பு

புத்தளம், ஜன.22

மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு தானே தீ வைத்து உயிர்மாய்த்துக்கொண்ட சம்பவம் புத்தளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. புத்தளம் தில்லையடி ரத்மல்யாய 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள கட்டடமொன்றில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என புத்தளம், மாவட்டத்துக்கான திடீர் விசாரணை அதிகாரி தெரிவித்தார். 26 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு தீ மூட்டி உயிரிழந்துள்ளார் என்பது சி.சி.டி.வி காட்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

## மேலும் 10 பேர் வைரஸால் பாதிப்பு

கொழும்பு, ஜன. 22

சுகாதார அமைச்சில் மேலும் பத்து ஊழியர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். கடந்த சில நாள்களுக்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என இனங் காணப்பட்ட பணியாளர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்தவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு உடனடியாக துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போதே இவர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது என அவர் தெரிவித்தார். (ரி5-இ)

உக்ரைன் சுற்றுலாவிகளுக்கு

## மிருகக்காட்சிசாலைகளை பார்வையிட அனுமதி மறுப்பு

கொழும்பு, ஜன.22

நாட்டுக்கு வருகைதந்துள்ள உக்ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தெஹிவளை உள்ளிட்ட பல மிருகக்காட்சிசாலைகளை பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் இதற்கான அனுமதியை கோரியுள்ளனர் எனவும், ஜனாதிபதியின் ஆலோசனை இன்றி எந்த தீர்மானத்தையும் எடுக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக மூடப்பட்டுள்ள பின்னவல மிருகக்காட்சிச் சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் பின்னவல சஃபாரி பூங்கா உள்ளிட்டவை மீண்டும் திறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# பூதவுடலுக்கு முன்பாக வழங்கிய வாக்குறுதி எங்கே?

மஹிந்தவை போட்டு உலுப்புகிறார் ஜே.வி.பியின் அனுரகுமார



**கொழும்பு, ஜன. 22**

**அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு முன்பாக நின்றவாறு தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா பெற்றுத் தருவேன் என உறுதியளித்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வாக்குறுதிக்கு என்ன நேர்ந்தது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா நாளாந்த கொடுப்பனவு விடயத்தில், கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் கேள்வி எழுப்பப்பட்டபோது, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று பிரதமரும், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரும் வாக்குறுதி வழங்கினர். தோட்டக் கம்பனிகளின் அனுமதி இருந்தாலும் இல்லாது போனாலும் மார்ச் மாதம் 1 ஆம் திகதி முதல் ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச உறுதியளித்திருந்தார்.

பூதவுடலுக்கு முன்பாக வாக்குறுதி வழங்குவது சத்தியபிரமாணம் செய்வதற்குச் சமமானது.

அவ்வாறே அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு முன்னால் நின்றுகொண்டு பிரதமர் மக்களுக்கு சத்தியம் செய்தார். தொண்டமான் தம்மை இறுதியாகச் சந்தித்த வேளையில் கூட ஆயிரம் ரூபா குறித்தே பேசினார் எனவும் பிரதமர் கூறினார். அதன் பின்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சம்பளக் கொடுப்பன குறித்து வாக்குறுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேயில்லை. இந்த மாத இறுதியிலாவது தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்குமா என அரசைக் கேட்கின்றேன்-என்றார். (ஒ.இ)

## ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு ரூபா 50 ஆயிரம் அபராதம்

கொழும்பு, ஜன.22



இந்தியச் சட்டத்தைப் பின்பற்றாத குற்றச்சாட்டில், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு இந்திய நீதிமன்றம் ரூபா 50 ஆயிரம் அபராதம் விதித்துள்ளது. தொழில் செய்யும் இடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கும் "போஷ்" சட்டத்தின் கீழ் புதுடில்லியின் நீதிமன்றம் ஒன்றே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த "போஷ் சட்டம்" சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் அதிகபட்சமாக ஐம்பதாயிரம் இந்திய ரூபாவரை அபராதம் விதிக்கப்படலாம். இதன் அடிப்படையில் விமான சேவை நிறுவனத்தின் நடத்தையை கருத்திற்கொண்டு, நீதிபதி இந்த அதிகபட்ச அபராதத்தை விதித்தார். ஏற்கனவே மற்றொரு பெண் தொடர்பான வழக்கில், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் பிராந்திய மேலாளர் லலித் டி சில்வா கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி இதே நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-இ)

கொரோனாத் தடுப்பு மருந்து:

## அரசியல்வாதிகளுக்கு முன்னுரிமையில்லை!

கொழும்பு, ஜன.22

கொரோனா வைரஸ் மருந்து வழங்கப்படும் போது அரசியல்வாதிகளுக்கு முன்னுரிமை வழங்கப் போவதில்லை.

ஆனால் சுகாதார பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதால், சுகாதார அமைச்சரும் சுகாதாரப் பணியாளர் என்ற பிரிவுக்குள் அடங்குவார். இதனால் சுகாதார அமைச்சருக்கு ஆரம்பத்திலேயே தடுப்பு மருந்து வழங்கப்படலாம் என சுகாதார அமைச்சக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, முதியவர்களுக்கு கொரோனா மருந்து வழங்கப்படும் மூன்றாவது கட்டத்திலேயே ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது. ஏனைய அரசியல்வாதிகள் எந்தப் பட்டியலுக்குள் அடங்குவார்களோ அந்தப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு தடுப்பு மருந்து வழங்கப்படும்.

இதுவரை அரசியல்வாதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. அவர்கள் பல்வேறு பிரிவுகளுக்குள் அடங்குவார்கள். சுகாதார அமைச்சர், சுகாதார பணியாளர் என்ற பிரிவுக்குள் அடங்குவார்-என்றார். (ற-இ)

## தொழில் முயற்சியாளருக்கு கடன் வழங்கல் திட்டங்கள்!

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன்வழங்கல் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் உள்நாட்டு, உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்தியவங்கி அதன் துணைநில் வைப்பு வசதி வீதம், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பவற்றை முறையே 4.5 சதவீதமாகவும், 5.5 சதவீதமாகவும் அவற்றின் தற்போதைய மட்டங்களிலேயே பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது. சர்வதேச நாணய சபை கடந்த ஆண்டில் ஒட்டுமொத்த சந்தைக் கடன் வழங்கல் வீதங்களின் குறைப்பைக் கருத்தில் கொண்டு, பொருளாதார வளர்ச்சிக்கு கடன்வழங்கல் வீதங்களில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய திருத்தமொன்று அவசியம் என்று பரிந்துரை செய்துள்ளது. (ற-இ)

## குழந்தையின் ஜனாஸா எரிப்பு: வழக்கு விசாரணை இன்று

கொழும்பு, ஜன. 22

பிறந்து இருபது நாள்களேயான குழந்தையின் ஜனாஸாவை எரித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு உயர் நீதிமன்றத்தில் இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

முன்னாள் அமைச்சர் சட்டத்தரணி பைசர் முஸ்தபாவினால் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் இவரே இந்த வழக்குத் தொடர்பில் நீதிமன்றில் ஆஜராகவுள்ளார்.

மேலும், இருபது நாள் குழந்தையின் ஜனாஸா தகனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையின் பல பாகங்களிலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, லண்டன், ஜேர்மன், இந்தியா போன்ற நாடுகளிலும் கண்டனப் பேரணிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரி5-இ)

## சிறைக் கைதிகளுக்காக புனர்வாழ்வு நிலையம்

கொழும்பு, ஜன.22

ஹொரண பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் புதிய சிறைச்சாலையில் புனர்வாழ்வு மத்திய நிலையம் ஒன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தற்போது வெலிக்கட மற்றும் கொழும்பில் அமைந்துள்ள சிறைச்சாலைகளின் கைதிகளுக்காகவே இந்த புனர்வாழ்வு மத்திய நிலையம் அமைக்கப்படுகிறது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ந-இ)

## ஷானி அபேசேகர மீண்டும் மறியலில்!

கொழும்பு, ஜன.22

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட 3 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று கம்பஹா பதில் நீதிவான் முன்னிலையில், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ற-இ)

# உலக சுகாதார அமைப்பில் மீண்டும் இணைந்தது அமெ.

## அதிபர் பைடன் அதிரடி



**வொஷிங்டன், ஜனவரி 22**
**உலக சுகாதார அமைப்பு மற்றும் பரிஸ் பருவநிலை ஒப்பந்தம் ஆகியவற்றில் மீண்டும் இணைந்தது அமெரிக்கா. அமெரிக்க ஜனாதிபதியாக நேற்றுமுன்தினம் பதவியேற்ற பைடன் இந்த அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்தார்.**

ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறியிருந்தது. ட்ரம்ப் எடுத்த இந்த முடிவுக்குக் கடும் கண்டனங்கள் குவிந்தபோதிலும் ட்ரம்ப் தன் முடிவில் விடாப்பிடியாக நின்றார். அத்துடன் கொரோனா வைரஸ் விவகாரத்தைத் திறம்படக் கையாளவில்லை என்று தெரிவித்து உலக சுகாதார அமைப்பில் இருந்தும் ட்ரம்ப் அமெரிக்காவை வெளியேற்றியிருந்தார். இந்த நிலையில் தான் அதிபராகும் முதல் நாளில் இந்த இரு விடயங்களிலும் மீண்டும் அமெரிக்கா இணையும் என்று ட்ரம்ப் தெரிவித்திருந்த நிலையில் தன் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அவர் குறித்த விடயங்களில் மீண்டும் அமெரிக்காவை இணைக்கும் உத்தரவைப் பிறப்பித்தார்.

அத்துடன் அடுத்துவரும் 100 நாள்களுக்கு அமெரிக்கர்கள் கட்டாயம் மாஸ்க் அணியவேண்டும் என்ற ஒப்பந்தத்திலும், அகதிகள் அமெரிக்கக் குடியுரிமையை பெறுவதற்கு வழியமைக்கும் ஒப்பந்தத்திலும் பைடன் கையொப்பமிட்டார். ட்ரம்பின் ஆட்சியின் பெரும் சர்ச்சையாகியிருந்த மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைக்கும் திட்டத்தையும் பைடன் நிறுத்தினார். (ம)



அமெரிக்காவில்

## இனவெறி உள்ளமை கசப்பான உண்மை!

### பைடன் பேச்சு

வொஷிங்டன், ஜன. 22
அமெரிக்காவில் இனவெறி, நிறவெளி உள்ளமை கசப்பான உண்மை இவ்வாறு தனது பதவியேற்பு உரையில் தெரிவித்தார் ஜோ பைடன்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பிளவு, இருள் இல்லாமல் நம்பிக்கையுடனும், ஒற்றுமையுடனும் நாட்டின் கதையை எழுதுவோம் எனவும் நாம் உறுதியாக உள்ளோம். அமைதியின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். என்னுடன் பணியாற்றும் என் ஊழியர்களே உலகம் நம்மைப் பார்த்துக் கொண்டிருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.
எல்லை தாண்டி இருப்பவர்களுக்கு எனது செய்தி என்னவெனில் அமெரிக்கா பரிசோதனைக்கு உள்ளானது. அதிலிருந்து தற்போது உறுதியாக மீண்டு வந்துள்ளது என்பதே. நாம் நமது கூட்டணிகளை சரிசெய்து மீண்டும் புதுப்பிக்க வேண்டும். நேற்றைய சவால்கள் மட்டும் இல்லாது இன்றைய மற்றும் நாளைய சவால்களையும் எதிர்கொள்ள வேண்டும்.
நாம் வெறுமனே நம்மிடம் இருந்த சக்தியின் உதாரணத்தால் அல்லாமல் நமது முன்மாதிரி சக்தியால் நாட்டை வழிநடத்துவோம். அமைதி, முன்னேற்றம் மற்றும் பாதுகாப்புக்கான வலுவான மற்றும் நம்பகமான பங்காளிப்பை நாம் அளிப்போம்.
இப்போது நாம் சோதிக்கப்படுகிறோம். செய்வதற்கு நிறைய இருப்பதால் இது தைரியத்துக்கான நேரம். இந்த அபாயகரமான நெருக்கடிகளை நாம் தீர்ப்போம் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். அமெரிக்கா கடந்த சில வாரங்களாக, மாதங்களாக வலிமிகுந்த பாடங்களைக் கற்றுள்ளது. அதில் உண்மையும் இருக்கிறது. பொய்யும் இருக்கிறது. பொய் அதிகாரத்துக்காகவும், லாபத்துக்காகவும் சொல்லப்படுகிறது. நமது அரசமைப்பை மதிக்க மற்றும் எமது தேசத்தைப் பாதுகாப்போம் என உறுதியளித்த தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் குடிமக்களாக ஒரு கடமையும் பொறுப்பும் உள்ளது. பொய்கள் தோற்கடிக்கப்பட வேண்டும். அமெரிக்கா தனது வரலாற்றில் சிறந்த அத்தியாயத்தை வரும் காலங்களில் எழுத இருக்கிறது' என்றார். (ம)

## பெப்ரவரி மத்திவரை ஜேர்மனி முடங்கும்!



பேர்லின், ஜன. 22
கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாக ஜேர்மனியில் அடுத்த மாதம் 14ஆம் திகதி வரை பொதுமுடக்கம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியில் 20 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 49 ஆயிரத்து 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கொரோனா கட்டுப்பாடுகளை தீவிர மாக்குவது குறித்து அரசு தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வந்தது.
புதிய வகை கொரோனாவும் ஜேர்மனியில் பரவுவதற்கு ஏதுநிலைகள் இருப்பதால் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி வரை அந்த நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)



## பைடனின் முடிவை வரவேற்றது ஐ.நா!

வொஷிங்டன், ஜன. 22
உலக சுகாதார அமைப்பில் மீண்டும் அமெரிக்காவை இணைத்துக்கொண்ட அதிபர் பைடனின் முடிவை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுள்ளது.
இதுகுறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், 'கொரோனா வைரஸுக்கு எதிராக உலக நாடுகளின் முயற்சிகளுக்கு உலக சுகாதார அமைப்பை ஆதரிப்பது மிக முக்கியமானது. உலக சுகாதார அமைப்புடன் அமெரிக்கா மீண்டும் இணைந்துள்ளது வரவேற்கத்தக்கது' என்று தெரிவித்துள்ளது. (ம)

## 73 பேருக்கு ட்ரம்ப் மன்னிப்பு

வொஷிங்டன், ஜன. 22
அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ட்ரம்ப், தனது பதவிக் காலத்தின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் 73 பேருக்குப் பொதுமன்னிப்பு வழங்கினார்.
இவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளவர்களில் பலர் ட்ரம்புக்கு நெருக்கமானவர்கள். தனது மகள் இவான்கா ட்ரம்பின் மாமனார் சார்லஸ் குஷ்னர், ட்ரம்ப்பின் தேர்தல் பிரசார மேலாளர் பால் மனாபோர்ட், முன்னாள் ஆலோசகர் ரோஜர் ஸ்டோன் ஆகியோர் ட்ரம்பால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டவர்களின் சிலர். (ம)



இந்தோனேசியாவின் சொலமன் தீவிலுள்ள மெராபி எரிமலை கடந்த சில நாள்களாக வெடிக்க ஆரம்பித்துள்ளது. கரும்புகையை வெளியிட்டு வந்த அந்த எரிமலை தற்போது நெருப்புக் குழம்புகளையும் கக்கி வருகின்றது என்றும் இதனால் அந்தப் பகுதியில் உள்ள பெருமளவான குடும்பங்கள் முன்னேற்பாடாக வெளியேற்றப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# தேங்காய் திருடியவர் பிணையில் விடுவிப்பு

காலி, ஜன.22

காலி, ரயில் சேவையாளர்களின் உத்தியோகபூர்வ தங்குமிடங்கள் அமைந்துள்ள காணியிலுள்ள தென்னை மரமொன்றில் 21 தேங்காய்களை திருட்டுத்தனமாக பறித்த நபரொருவர் காலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் காலி பிரதான நீதிவான் ஹர்ஷன கெக்குனவல முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது 2 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் அவரை விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
06
05
1932



இறப்பு
21
01
2021

### சுப்பிரமணியம் செல்லம்மா

சுப்பிரமணியம் செல்லம்மா நேற்று (21.01.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்-தார். அன்னார் நீர்வேலி வடக்கு முன்கொடையை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு சிவகுருலேனை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி தெய்வானை ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற சின்னையா தங்கம் ஆகியோரின் மருமகளும், பரமநாதன், மகேஸ்வரி, நகுலேஸ்வரன், பரமேஸ்வரன் (ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), யோகராணி, ராஜவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், விநாயகமூர்த்தி, ரஞ்சிதமலர், சரோஜினி, உமாபதி, தமிழ்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசியன், அனுரதன், மிதுலன், வினோஜினி, சுஜாகன், பிரசன்னா, தீபிகா, துவாரகன், கஜேந்தினி, மகிழ்ந்தினி, மகரன், யதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சானுகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**
**077 314 6013, 077263 6449**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### சரஸ்வதி வீரவாகு

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வீரவாகு நேற்று (21.01.2021) வியாழக்கிழமை சண்டிலிப்பாயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை வீரவாகுவின் அன்பு மனைவியும், ஜெயந்திரா தேவி, காலஞ்சென்ற கஜேந்திரன் (ஜேர்மனி) லோகேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, சிவபாக்கியம், நவரத்தினம்:, இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், நவரத்தினம், மகாலிங்கம், பஞ்சாட்சரம், வாமதேவன் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற இராஜகோபாலன், பத்மலோஜினி, கமலவதியின் மாமியும், கார்த்திகா -சாயிந்தன் (அவுஸ்திரேலியா), கோபிகா- மோகனராஜ் (அமெரிக்கா) கோபாலஸ்காந்தன் (அவுஸ்திரேலியா), துஷிந்தன், துர்விதா, துக்ஷியா, வைஷ்ணவன், கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாய்விஜய், சாய் ஹறிணி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் சண்டிலிப்பாயில் உள்ள அன்னாரின் "கோகுலம்" இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**98, கல்வளை வீதி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 205 2809, 077 210 7886**

# சென்னை மெரினா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி

## அமைக்குமாறு கோருகிறார் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர்

**கொழும்பு, ஜன. 22**

**இலங்கைத்தீவில் இறந்தவர்களை நினைவுகூர்வதற்கான வாய்ப்பு தமிழ் மக்களுக்கு மறுக்கப்படும் நிலையில், சென்னை மெரினா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை தமிழ்நாட்டு அரசு நிறுவ வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கான அரசியல் வெளி இல்லாத நிலையில் தான் நாடு கடந்த தமிழீழ அரசு உருவாக்கப்பட்டிருந்தது.

தற்போது நினைவுகூர்வதற்கான வெளியும் தமிழ் மக்களுக்கு அங்கில்லாத நிலையில், அதற்கான வெளியை இலங்கைத்தீவுக்கு வெளியே உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. உலகின் தலைநகரங்களில் முள்ளிவாய்க் கால் அடையாளச் சின்னங்களை உருவாக்கும் வகையில், அதற்கு முன்மாதிரியா கத் தமிழகத்தின் சென்னை மெரினா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளி வாய்க்கால் அடையாளச் சின்னத்தைத் தமிழ்நாட்டு அரசு உருவாக்க வேண்டும் எனக் கோருகின்றோம். இதுமட்டுமல்லாது மே18 முள்ளி வாய்க்கால் இன அழிப்பு நாளை உலகெங்கும் வாழும் தமிழர்களை அடையாளப்படுத்தும் விதமாக 'உலகத் தமிழர் தேசிய துக்க நாளாக' தமிழ்நாட்டு அரசு பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம், என்றார். (ஒ.இ)

# கொக்காவில் – ஐயன்குளத்தில் 10 கிலோமீற்றர் வீதி சேதம்

## சீரமைக்குமாறு கோரிக்கை

கொக்காவில் -துணுக்காய், வீதியில் கொக்காவிலிலிருந்து ஐயன்குளம், கிராமம் வரை உள்ள சுமார் 10 கிலோமீற்றர் நீளமான வீதி சீரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதால் மழைகாலங்களில் பயணம் செய்யமுடியாத நிலையில் உள்ளது என்று புத்துவெட்டுவான் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எமது கிராமத்திலிருந்து அத்தியாவசிய தேவைகளுக்கு கிளிநொச்சிக்கு அல்லது மல்லாவிக்கே செல்லவேண்டிய நிலை யில் நாங்கள் அன்றாடம் இவ் வீதியைப் பயன்படுத்துகின்றோம். எமது கிராமத்திலிருந்து கிளிநொச்சிக்குப் பயணிக்கும் போது கொக்காவில் சந்திவரை உள்ள 5 கிலோமீற்றர் வீதியும் மல்லாவிக்குப் பயணிக்கும் போது ஐயன்குளம் வரையான 5 கிலோ மீற்றர் வீதியுமாக கொக்காவில் துணுக்காய் வீதியில் சுமார்10 கிலோமீற்றர் வீதி இன்று வரை சீரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்கள், மருத்துவ தேவைக்காகச் செல்லும் கர்ப்பிணித்தாய்மார், முதியவர்கள் எனப் பலர் இவ்வீதியால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் பயணம் செய்யவேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியை சீரமைத்துத்தர நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றனர். (ஐ-ரி1)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சின்னையா

**(தும்பு முட்டாஸ் வியாபாரி)**

சங்கானை மேற்கு வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சின்னையா (தும்பு முட்டாஸ் வியாபாரி) நேற்று (21.01.2021) வியாழக்கிழமை காலமானார். அன்னார் சிவபாக்கியத்தின் கணவரும், நாகேந்திரம் (கனடா) நாகேஸ்வரி (நாகர் கோவில்) ராஜேஸ்வரி (மானிப்பாய்) நகுலேஸ்வரி (வடலியடைப்பு) இந்திரன் (பிரான்ஸ்) புவனேஸ்வரி (லண்டன்) செல்வசந்திரன் (கனடா) ஆகியோரின் தகப்பனாரும் றாஜி, பொன்னையா, இந்திரலிங்கம் (ராசன்) சிறிஸ்கந்தராசா (சிறி) தீபா, விஜிக்குமார், சிவமதி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, விளாவெளி இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சாரதி தேவை (லொறி)

மட்டக்களப்பு வியாபாரத்திற்கு AD சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள ஒருவர் தேவை. 3 நாள்கள் பயணம் போகும் போது வாழைக்குலை ஏற்றிச் செல்லவும். வரும்போது அரிசி ஏற்றிக்கொண்டு வருதல் வேண்டும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**இளமுருகன்**

075 351 6299, 076 565 0769

Software, Web Development
Project Training
076 300 5506

## ஆலய பூசகர்/ ஆலய குருக்கள் சேவை

சிவாகம முறைப்படி, ஆசாரத்துடன் ஆலய வளர்சியை நோக்கமாகக் கொண்டு சேவை அடிப்படையில்

- நித்திய பூசை
- அபிஷேகம்
- திருவிழாக்கள்
- கும்பாபிஷேகம்
- பாலஸ்தாபனம்,
- திருமண, ருதுசாந்தி,
- வீடு குடிபுகுதல்

பூஜையோடு அடியார்களின் சமய வழிபாட்டை ஊக்குவிக்க சமய பிரசங்கங்கள், பஜனை செய்தல் ஆகும். ஆகம கிரியைகள் நன்கு கற்று சேவையாற்றும் சிவாச்சாரியார்கள், தர்மகர்தாக்கள்/ நிர்வாக சபையினரின் நிதி நிலைமைக்கேற்ப சேவையாற்றப்படும்.

தொடர்பு:
074 179 1300


## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றின் அங்கத்தவரும், செயற்குழு உறுப்பினருமாகிய **Dr.T.திலீபன்** அவர்களின் தாயார்

### திருமதி தம்பிராஜா இரத்தினவதி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

**வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றம்.**

## மரண அறிவித்தல்



### திருமதி தம்பிராசா இரத்தினவதி

**பிறப்பு** 28.03.1936 — **இறப்பு** 20.01.2021


தும்பளை தெற்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா இரத்தினவதி அவர்கள் கடந்த (20.01.2021) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் பூதவுடல் தெல்லிப்பலையில் இருக்கும் மகனின் இல்லத்தில் இருந்து மாகியம்பதி புனித செபஸ்தியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மாகியப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 28 . 05 . 1947 — மறைவு 23 . 12 . 2020



அமரர்

### சதாசிவம் உருத்திரேஸ்வரன்


அன்னாரின் இழப்பில் துயருறும் எமக்குப்பல வழிகளிலும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் நேரடியாக பங்குபற்றி மலர்வளையம் வைத்து அஞ்சலி தெரிவித்து இன்றுவரை ஆறுதல் கூறிவரும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு. அன்னாரின் அந்தியேட்டி. சபிண்டீகரணக் கிரியைகள். ஆத்மசாந்திப்பிரார்த்தனைகளைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனம் 23/01/2021ம் திகதியன்று பகல் 12 மணியளவில் கொழும்பு - 4 லோரன்ஸ் வீதி இல.8 ல் அமைந்துள்ள A.V.S மண்டபத்தில் நடைபெற உள்ளதால் இத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர் : வி.உருத்திரேஸ்வரன் (மனைவி)**
**திரு.திருமதி.கணேசராஜன்**
**(பெறாமகள் மற்றும் மருமகன்)**
**(சட்டத்தரணிகள்)**

## துயர் பகிர்தல்

**இளவாலை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக காணியை நன்கொடையாக வழங்கிய பெருந்தகை**

**திருமதி ந. நரேந்திரதிலகம்** அவர்களின் அன்புக் கணவர்



### திரு. அரியகுட்டி நடராஜா

(தும்மலை, இளவாலை)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நாமும் துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நோயாளர் நலன்புரிச் சங்கம்
**பிரதேச வைத்தியசாலை, இளவாலை.**


## வெற்றுப்போத்தல் சேகரித்தல்

எமது தொழிற்சாலைக்கு
**சீல் அல்லாத**
**வட்ட போத்தல்கள்**
தேவைப்படுகின்றது.
750 ml,375 ml,180 ml
போன்ற அளவுகளைவுடைய மீண்டும் பாவிக்கக்கூடிய வெற்றுப் போத்தல்கள்
**சிறந்த விலையில்**
பெற்றுக்கொள்ளப்படும்.

இடம்: மானிப்பாய்
தொடர்பு: 076 717 1253


## 3 ஆம் ஆண்டு நீங்கா நினைவில்

மண்ணில் 16 . 06 . 1939 — விண்ணில் 26 . 01 . 2018



அமரர் திருமதி

### சாந்தநாயகி தணிகாசலம்

(நிறுவுனர் தணிகா நுண்கலைக் கல்லூரி)

*அம்மா !*

காலை கண் விழித்த நொடி
தேடிய தங்கள் முகம்
எம் மனதில் சுவடாய்
ரணமாகிப் போனதேனோ
நீங்களற்ற நம் வாழ்க்கை
நாதியற்றுப் போனதம்மா -தம்
அன்பிற்கோ இணையோ
ஏதுமின்றிப் போனதம்மா
பாசத்தின் பண்புருவே
நேசத்தின் இருப்பிடமே
ஆண்டுகள் கழிந்தாலும்
ஓவியமாய் தம் உருவம் - நம்
அன்றாட வாழ்வியலில்
காவியமாய் நீள
நம் பாசத்தின் ஏக்கங்கள்
பகிராத வலியாய்
நிதம் எம்மைத் தொடர
இன்றோ உங்கள்
நினைவு நாள்- ஆனால்
நினைக்காத நொடியில்லை
எப்போதும் எம்முடன்
நீங்கள் வாழ்ந்த அந்த
பொக்கிஷமான நாட்களை
மீண்டும் மீண்டும் நாம் இங்கு
தேடுகின்றோம் அம்மா
தங்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

151/1(528) பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

## அமெ.அழுத்தத்தை...

ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:
இலங்கைக்கு எதிரான மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களைத் தொடர அரசு தயாராக இருக்கின்றது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் பதவியேற்ற பின்னர் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாகம் முழுமையாகச் செயழிழந்துள்ளது. விலகிச் சென்ற அனைத்து அமைப்புக்களும் மீண்டும் அமெரிக்காவுடன் இணைந்து கொள்கின்றன.

பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஜோ பைடன் மற்றும் கமலா ஹாரிஸ் ஆகியோர் இணைந்து 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மீண்டும் முன் கொண்டு செல்வார்கள். அவர்களின் பின்னணியில் உள்ள அணியினரைப் பார்க்கும்போது அது தெளிவாகத் தெரிவிக்கின்றது. அதனால் இலங்கையில் முடிந்தால் உடனடியாக தேசிய மனித உரிமைத் திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். என்றார். (எ-இ)

## 887 பேருக்கு...

அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 56 ஆயிரத்து 76 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 47 ஆயிரத்து 984 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 816 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

அதையடுத்து நாட்டில் கொரோனாத் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 276 ஆக அதிகரித்துள்ளது. பேலியகொடை பிரதேசத்தைச் சேர்ந்த, 71 வயதான பெண் ஒருவரும், அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதான ஆண் ஒருவருமே உயிரழிந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றால் இதுவரை 276 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களில் 263 பேர் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## தடுப்பூசியைக்...

காமல், தடுப்பூசிகளைக் காட்டி மக்களை ஏமாற்ற முயற்சிக்க வேண்டாம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
இலங்கையில் மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் அது தொடர்பாக நாடாளுமன்றத்துக்கு வெளியில் மக்களின் குரலாக ஐக்கிய தேசியக் கட்சியின் குரல் இருக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத் திட்டங்களைத் தயாரிக்காது தடுப்பூசி தொடர்பாக அரசு கதைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் தடுப்பூசியை வழங்கிய-பின்னர் பிரச்சினை முடிந்துவிடும் என்று எண்ணிவிட முடியாது.

தடுப்பூசியைக் காட்டி மக்களை ஏமாற்றாது, கொரோனாவைத் தடுப்பதற்கு முறையான வேலைத் திட்டங்களை அரசு முன்னெடுக்க வேண்டும். தடுப்பு மருந்தைக் கொண்டு வருவது தொடர்பாக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை நாட்டுக்கு அரசு வெளியிட வேண்டும் -என்றார். (எ-22)

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலைகள், என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்**

## 2021 (01.02.2021-31.12.2021)

யாழ்ப்பாண மாநகர சபையினால் 24.10.2020 ம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைவாக இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.02.2021 ம் திகதி முதல் 31.12.2021 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப் படுகின்றது.

**கேள்விப் படிவக் கட்டணம்** - ரூபா 1,000.00
**கேள்விப் படிவம் விநியோகித்தல்** - 22.01.2021 – 27.01.2021 (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
**கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்** - 29.01.2021 (மு.ப 9.00 மணிவரை)
**கேள்வி திறத்தல்** - 29.01.2021 9.30 மணி

**நிபந்தனைகள் :**
2021ம் ஆண்டுக்கான கேள்வியில் சித்திபெற்று 1/3 பணம் செலுத்தாத கேள்விதாரர்கள் மீள் கேள்வியில் சித்தி பெறினும் பரிசீலிக்கப்பட மாட்டார்கள்.

இறைச்சிக்கடைகள்

| இல | இறைச்சிக்கடை | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 58,046.63 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 207,181.80 |
| 3 | பண்ணை கோழியிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 870,480.00 |
| 4 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 136,800.00 |
| 5 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 364,500.00 |
| 6 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 369,000.00 |
| 7 | செங்குந்தா ஆட்டு இறைச்சிக்கடை | இல06 | 5,000.00 | 639,306.00 |
| 8 | புங்கன் குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல01 | 5,000.00 | 101,904.08 |
| 9 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 796,578.30 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 786,903.87 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 306,000.00 |
| 12 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 357,210.00 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 317,520.00 |
| 14 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 223,256.25 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 198,598.85 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 220,577.18 |
| 17 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 59,296.86 |
| 18 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 11,453.04 |
| 19 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 71,541.23 |
| 20 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 556,860.63 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 526,500.00 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 405,433.35 |
| 23 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | இல 01 | 5,000.00 | 240,100.00 |

துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலை, பொதுச்சந்தை

| தொ. இல | துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலை, சந்தை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | பெரிய கடை மரக்கறிச் சந்தை | 10,000.00 | 1,703,682.00 |
| 2 | பண்ணை மீன் சந்தை | 10,000.00 | 4,769,838.00 |
| 3 | புங்கன் குளம் உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களின் சந்தை | 2,000.00 | 8,059.55 |
| 4 | பண்ணை மீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 152,190.00 |
| 5 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 238,140.00 |
| 6 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகளின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 12,064.41 |
| 7 | நீதிமன்ற துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2,000.00 | 164116.80 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**
**22.01.2021**


# வேலையாள்கள் தேவை

முறுகண்டியில் (கிளிநொச்சி) இயங்கும் **சைவ உணவகம்**
மற்றும் **ஐஸ்கிறீம்** உற்பத்தி நிலையத்திற்கு

- உணவு உற்பத்தியாளர்
- உணவு பரிமாறுபவர்
- விற்பனை பிரதிநிதி
- சுத்திகரிப்பாளர்

உடன் தேவை. இருபாலாரும்

- கொழும்பில் இயங்கும் தனியார், வெளிநாட்டு, உள்நாட்டு பாசல் நிறுவனத்திற்கு வேலையாள் தேவை.

**077 386 6250**


# கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் மருத்துவ உத்தியோகத்தராகக் கடமை புரியும் **டாக்டர் த.திலீபன்** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி.தம்பிராஜா இரத்தினவதி

அவர்கள் 20.01.2021 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிச் சங்கம்**
**சித்த போதனா வைத்தியசாலை-கைதடி.**

# 51ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
03.10.1942



மறைவு
02.12.2020

கடந்த 02.12.2020 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் சீனி பாலேந்திரன்

**திதி: கார்த்திகைமாத அபரபட்ச துதியை**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 21.01.2021 வியாழக்கிழமை மு.ப 09.30 மணிக்கு கீரிமலை தீர்த்தக்கேணியிலும் 23.01.2021 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத்தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். தாங்கள் குடும்பத்தினருடன் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் வீதி,
அச்செழு வடக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
077 4446533
077 7296980

# 16 ஆம் நாள் நினைவேந்தலும் நன்றி நவிலலும்

தோற்றம்
01 . 12 . 1942



மறைவு
07 . 01 . 2021

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய
எமது குடும்பத்தலைவி

## அமரர் விருத்தாசலம் தவமணிதேவி

அவர்களின் மறைவையொட்டி 16 ஆம் நாள் நினைவஞ்சலியின் மூலம் அவர் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சல்லிப்பிள்ளையார். மருதாம்புலம் பத்திரகாளியம்மன். கந்தவனக்கடவை கல்யாண வேலவன். குளத்தடி வைரவரை வேண்டுவதுடன் அவர்களின் மறைவுச்செய்தி கேள்வியுற்று நேரிலும். தொலைபேசி மூலம். சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் தொடர்புகொண்ட உற்றார். உறவினர்களுக்கும். நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கந்தவனம் கோயிலடி,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## VACANCIES
## FACULTY OF ENGINEERING
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

Senior Professor/ Professor of **Computer Engineering/ Electrical and Electronic Engineering/Mechanical & Process Engineering**

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/Lecturer (Unconfirmed)/ Lecturer (Probationary) in ***Civil Engineering/Computer Engineering/ **Electrical and Electronic Engineering/ ***Mechanical & Process Engineering/ ****Engineering Mathematics**

Note 01:

* For positions in Civil Engineering special consideration will be given to those who have specialized or willing to specialized in Geotechnical Engineering / Transportation Engineering

**For positions in Electrical & Electronic Engineering special consideration will be given to those who have sound knowledge in Electronics and Robotics.

*** For positions in Mechanical & Process Engineering special consideration will be given to those who have first degree in Production Engineering/Textile Engineering/Material Science Engineering or equivalent specialty in Engineering or willing to specialized in Mechanical & Process Engineering.and

Those who have sound knowledge in Machine Design, Thermal Engineering, Compressive Fluid Mechanics, Automobile Engineering, Mechatronics, Manufacturing Process Engineering and Material Science Engineering.

**** For positions in Engineering Mathematics, special consideration will be given to those who are holding first degree in Engineering and have specialized or willing to specialized in Engineering Mathematics.

### REMUNERATION AND OTHER BENEFITS

Remuneration:

| Posts | Salary scales |
|---|---|
| Senior Professor | Rs.139,175 – 11 x 2,925– 171,350/-p.m |
| Professor | Rs.117,350-13 x 2,700-152,450/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.91,310-7 x 2,170-106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11 x 1,630-97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730/-p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary:
   i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | - 151% |
| Lecturer (Unconfirmed) | - 131% |
| Lecturer (Probationary) | - 115% |

   ii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)

   iii) Additional monthly allowance – 20%

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits
V. Free Medical Services

Those who wish to apply are strongly advised to visit our University Website www.jfn.ac.lk for all the relevant details.

**Closing date:**

Applications should reach us on or before the date given below:

| | |
|---|---|
| **Post of Senior Professor/Professor** | **- 23.03.2021** |
| **Other posts** | **- 23.02.2021** |

Application forms and other details will be available in the University website www.jfn.ac.lk. Applicants are requested to send the prescribed application form downloaded from the University website with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.

The candidates who apply for more than one post should submit separate application along with separate Bank slip. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Perfected applications and self evaluation with supportive documents for the Post of Senior Professor/Professor shall be sent to the Vice-Chancellor, University of Jaffna, Sri Lanka as required by the University Grants Commission Circulars No. 5/2015, 5/2015(i) (for Senior Professor), University Grants Commission Circulars 916, 4/2014 and Establishments Circular No. 4/2010 (for Professor), (see http://www.jfn.ac.lk/index.php/circular/) with a covering letter.

Perfected applications for the other posts shall be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka under registered post with the photocopies of statement of the Degrees and Service certificates. Submission of Applications will not be entertained in person.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Application and referees reports should be in the relevant format. Illegible and Incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
21.01.2021

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வீட்டு
வேலைகள் செய்வதற்கு
35 - 50 வயதுக்கு உட்பட்ட வீட்டுப்
பணிப்பெண் தேவை.

**077 991 5075**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 28.09.1926



ஆண்டவன் அடியில் 14.01.2019

### அமரர் திருமதி தம்பு இராசமணி

திதி: 22.01.2021

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குடும்பம், உற்றார், உறவினர், சுற்றம் என அனைவரும் சீரும் சிறப்புமாக வாழ வழி காட்டி வந்தாரை வரவேற்று விருந்தளித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து விண்ணுலகம் புகுந்து ஆண்டு இரண்டில் வெறுமையுடன் வாழ்கின்றோம்.

உங்கள் ஆன்மா சாந்திபெற இறையருளை வேண்டுகின்றோம்.

மருதடி பிள்ளையார் கோயிலடி,
கச்சாய் வீதி, கொடிகாமம்.

தங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மண்மகிழ் 21 • 07 • 1953



விண்மகிழ் 21 • 12 • 2020

கடந்த 21.12.2020 திங்கட்கிழமை இறைபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் உயர்திரு. கந்தசாமி நித்தியானந்தன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.01.2021 அன்று கீரிமலை கண்டகி தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

அன்னார் நோயுற்றிருந்தவேளை தகுந்த முறையில் சிகிச்சையினை வழங்கிய யாழ்.போதனாவைத்தியசாலை சமூகத்தினர், தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை குறிப்பாக புற்றுநோயியல் பிரிவுச் சமூகத்தவர்க்கும், அன்னா ரின் பிறப்பு முதல் இறப்பு வரை பல வழிகளிலும் தோளோடு தோள் நின்று உதவியளித்த உறவுகள், அன்பர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் அன்னாரின் பிரிவினை அறிந்து இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் வார்த்தைகளினை நல்கிய நல்லுள்ளங்கள் மற்றும் தொலைபேசி சமூக வலைத்தளங்கள், பத்திரிகைகள் வாயிலாக வும், துண்டுப்பிரசுரம் பனர்கள் மலர்வளையங்கள் மூலம் தமது அனுதாபங்களினை பகிர்ந்தோருக்கும், அயலவர்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வில் பங்குபற்றிய அனைவரையும் நாட்டில் நிலவும் **கொவிட் 19 கொரோனா** சூழ்நிலை, சுகாதார நடைமுறைகள் காரணமாக அழைக்க முடியாமைக்கு, மிகவும் மனம் வருந்துகின்றோம்.


பன்னாலை தெல்லிப்பழை. குடும்பத்தினர்

# சசிகலாவுக்குத் தொற்று

சென்னை, ஜன.22
தமிழகத்தின் அ.தி.மு.கட்சியின் முக்கிய பிரமுகரும், தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் நண்பியும், சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றவருமான சசிகலாவுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த சசிகலா எதிர்வரும் 27ஆம் திகதி விடுதலையாகவுள்ளார்.
இந்தநிலையில் சிறையில் அவருக்கு திடீரென மூச்சுத் திணறலும், காய்ச்சலும் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பெங்களூரில் விக்டோரியா மருத்துவமனையில் சேர்க்கபட்டுள்ள சசிகலாவுக்கு தொடர் சிகிச்சை வழங்கப்படுகின்றது.
சசிகலாவுக்கு நீரிழிவு, ரத்த அழுத்தம், தைரொய்ட், காய்ச்சல் போன்றவற்றுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. நோய் எதிர்ப்பு சக்தியை ஊட்டும் மருந்துகளும் செலுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவருக்கு நுரையீரலில் தொற்று அதிகமாக இருப்பதால், அதற்கான சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
நேற்றுக் காலை அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் தொற்று கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் மாலையில் நடத்தப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதே வேளை, அவரது உடல் நிலை தொடர்பாக அச்சமடையத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 04 . 1947



இறப்பு 21 . 01 . 2021

### சோமசுந்தரம் வில்வராஜன்

சங்கரத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் வில்வராஜன் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கைலாசபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், கருணாவதியின் அன்புக் கணவரும், அமரர் இந்திரவதனன், ஜெயவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கேசவன் (அவுஸ்திரேலியா) விரோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேனுகா, வித்தகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், விவேகன், விகாஷினி, விசாகன், கவிஸ், அனிஸ், அமிசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டு, வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

தகவல் :
வி.நிரோஜினி (மகள்)

ஓம்
விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 05 . 1937



இறப்பு 21 . 01 . 2021

### சரவணமுத்து பாலசுப்பிரமணியம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (21.01.2021) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற வீரவாகு அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சரஸ்வதி அவர்களின் அன்புக் கணவரும், அமரர் நாகராசா, அமரர் ராசுமணி, அமரர் தங்கராசா, திருநாவுக்கரசு, அமரர் கணபதிப்பிள்ளை, ஜெகநாதன், தங்கமணி ஆகியோரின் அன்பு உடன் பிறப்பும், ஜேதீஸ்வரன் (ஜேர்மனி), ஜோதீஸ்வரன் (பிரான்ஸ்), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மதிவதனா, தனுஷா, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாருகேசன், பவனேஸ், டினோஜன், ஜெசாந், துளக்சிகா, லக்சிகா , தன்சிகா, டச்சிதா, ரிகானா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.
077 501 7103

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பரமேஸ்வரி முருகேசபிள்ளை (நயினாதீவு)



அன்னையின் மடியில் 05.11.1938

அம்பிகை அடியில் 21.01.2021

நயினாதீவு 8ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 5ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி முருகேசபிள்ளை அவர்கள் 21.01.2021 வியாழக்கிழமை பிற்பகல் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சி.நாகமுத்து-நாகலெட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நா. கனகசபை-கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், சுந்தரேஸ்வரி (கனடா) நகுலேஸ்வரி, நித்தியேஸ்வரி (கனடா) நகுலேஸ்வரன் (லண்டன்), சர்வேஸ்வரி (பிரான்ஸ்) பாலேஸ்வரி, சத்தியேஸ்வரி (லண்டன்) காலஞ்சென்ற முருகதாஸ் ஆகியோரின் அருமைத் தாயாரும், முன்னைநாதன் (பொறியியலாளர் - கனடா) அம்பிகைபாகன் (ஓய்வுநிலை நிர்வாக கிராம அலுவலர்) கனகானந்தர் (கனடா) கிருபானந்தா (பிரான்ஸ்) வரதன் (லண்டன்) விஜயலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சி.நா. முத்தையா, சி.நா.மதியாபரணம், சி.நா. சண்முகநாதன் மற்றும் சி.நா. நாகராசா காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் கனகாம்பிகை (கனடா) காலஞ்சென்ற ஜெதாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இலக்குமி அம்மா, யோகம்மா மற்றும் தங்கம்மா அமிர்தவல்லி மற்றும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு சந்திரசேகரம், பரமலிங்கம், கணபதிப்பிள்ளை, சுப்பிரமணியம், கதிரவேற்பிள்ளை (முன்னாள் நீதவான்) பரராசசிங்கம், நாகரத்தினம் மற்றும் சரஸ்வதி (ஓய்வுநிலை அதிபர்), சகாதேவன் (ஓய்வுநிலை விரிவுரையாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், செந்தூரன் சஜீபா மேகலா-செந்தூரன் (கனடா) சர்மதா- சுதர்சன் (கனடா) Dr.பார்த்தீபன்-தனுசா (அமெரிக்கா), ஸ்ரீரங்கா (கிராம அலுவலர்) நாகேஸ்வரன் (ஆசிரியர்) சட்டத்தரணி ஸ்ரீராகவன், கம்சத்வனி, ஸ்ரீ சுகன்யா, கௌசிகா, வனஜன் (கனடா) அபிஷன் (கனடா) Dr. கிருஸ்திகா (லண்டன்) கிருசான் (லண்டன்) நிலானி, நிலக்சன் (பிரான்ஸ்) சாயகன் சயானி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஞ்சனா, ஆரியா, செரியன், அகிம்சன், ஆர்யவன், அக்சிவன், சிந்தூரா, அவிக்னன், சேனன், லக்மி, அனுசிகா, அஸ்விகன், அக்சனா, வினிஸ் ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்ற சவுந்தரம் சுந்தரேஸ்வரி, தில்லையம்பலம் மற்றும் கனகாம்பிகை நவசக்திதேவி, ஜெயராசா, சாரதாமணி ஆகியோரின் அன்பு உடன்பிறவா சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஐ.நாவில்...

கூட்டத் தொடருக்கு முன்னதாக அதன் இறுதி வடிவம் பகிரங்கப்படுத்தப்படவுள்ளது. அந்த அறிக்கையின் பிரதி ஒன்று தற்போது இலங்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னதாக, இலங்கையின் பதிலளிக்கும் உரிமைக்காக தற்போது அது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தகவலறிந்த வட்டாரங்களின் கூற்றுப்படி, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக இதுவரை சமர்ப்பிக்கப்பட்டவற்றில், அதிக அழுத்தம் ஏற்படுத்தும் அறிக்கையாக இது அமைந்துள்ளது என்று தெரியவருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் அம்மையார் அறிக்கை தமக்குக் கிடைத்துள்ளதை இலங்கை வெளிவிவகார அமைச்சும் உறுதி செய்துள்ளது. இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி 22ஆம் திகதி முதல் மார்ச் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விவகாரமும் உள்ளடக்கப்படவுள்ளது.

அமர்வின்போது, இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான சபையின் தீர்மானம் 30/1 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பான விரிவான அறிக்கையை இலங்கையும் சமர்ப்பிக்கும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் உட்பிரிவுகளில் திருத்தம், அரசியல் கைதிகளின் வழக்குகளை மீளாய்வு செய்தல், புதிய ஆணைக்குழு ஒன்றை நிறுவுதல் போன்ற விடயங்களையும் இலங்கை உள்ளடக்கவுள்ளது.

அதேவேளை, ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு இலங்கை வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமை மற்றும் மனித உரிமை விவகாரங்களில் அதன் கடமைகளை தற்போதைய மற்றும் முந்தைய அரசுகளில் தோல்வி தொடர்பாகவும் மிச்செல் பச்லெட் அம்மையார் கரிசனை செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொறுப்புக் கூறல் விடயத்தில் அரசு தனது கடமையை நிறைவேற்றவில்லை என்று சர்வதேச சமூகம் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. இந்தப் பின்னணியில் இலங்கைமீது கிடுக்குப்பிடி பிடிக்க இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானித்துள்ளது. (எ-22)

## கொரோனா பரவல்....

மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி, சிகிச்சைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் வீடு திரும்பியுள்ளார். கொரோனா வைரஸ் தொற்றின் அனுபவங்களையும், அரசு மற்றும் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களையும் அவர் தனது உத்தியோகபூர்வ முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

அனைத்துக் கொரோனா நோயாளிகளையும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பும் நிலையில் அரசு இல்லை. பொதுமக்கள் பொறுப்பாக இருப்பதன் மூலமே கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும். நாடு முழுவதும் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது. காய்ச்சல், இருமல், சுவையின்மை போன்ற அறிகுறிகள் இருந்தால், குடும்ப உறுப்பினர்களை விட்டு விலகி, சுயதனிமைப்படுத்தலில் இருப்பதே சிறந்தது.

வெளிநாடுகளில் உள்ள 60 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கும்போது, அவர்கள் அனைவருக்கும் அரசு தனிமைப்படுத்தல் நிலையங்களை ஒதுக்குவது சிரமமான காரியம். அவ்வாறானவர்களை வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (எ-22)

## கிழக்கு...

தங்கியிருந்த மாணவிகள் நால்வருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் 60 பேருக்கு நேற்று எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் கல்முனையைச் சேர்ந்த 2 மாணவிகளும், பொலனறுவையைச் சேர்ந்த இரு மாணவிகளுக்குமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

## பாம்பு தீண்டி...

துள்ளது.

யோ. குமார் (வயது-43) என்பவரே உயிரிழநதுள்ளார்.

சரசாலையில் மேய்ச்சலுக்கு மாட்டைக் கட்டியபோது புல்லுக்குள் மறைந்திருந்த பாம்பு அவரைத் தீண்டியுள்ளது. அதை அறியாத அவர் வீடு திரும்பியுள்ளார். மாலையில் அவரது உடலில் மாற்றம் ஏற்பட்டதை அடுத்து அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டபோதும், அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## நிலாவரையில்....

சின்னங்கள் இருக்கலாம் என்றதன் அடிப்படையிலேயே அவர்கள் மேற்படி ஆய்வில் ஈடுபட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வலி. கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ்க்கு அறியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவர் குறித்த பகுதிக்குப் பயணம் மேற்கொண்டு நிலைவரத்தைத் தெரிந்தறிந்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலிகிழக்கு பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட நிலாவரை கிணறு அமைந்துள்ள பகுதியிலே அத்திபாரம் போன்ற கிடங்கு வெட்டப்படுகிறது என எமக்கு பிரதேச மக்களால் தகவல் வழங்கப்பட்டது. அதனை அடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்தோம். குறித்த இடத்தில் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அவர்களிடம் இது தொடர்பில் கேட்டபோது இது ஒரு சாதாரண தொல்லியல் ஆய்வு எனக் குறிப்பிட்டனர். இந்த இடத்தில் தொல்லியல் ஆய்வு செய்யலாம் இது தவறல்ல. ஆனால் இங்கே பிழையான வகையிலே முடிவேதும் எடுக்கப்பட முடியாது என்றார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கமும் சம்பவ இடத்துக்கு வருகைதந்தார். அவர், ஆழந்தெரியாத நிலாவரை வற்றாத கிணறு எமது ஆரம்ப கால முன்னோர்கள் மற்றும் மன்னர்களோடு தொடர்புடையது. இப்பொழுது தொல்பொருள் திணைக்களம் பல இடங்களில் ஆக்கிரமிப்புசெய்யும் வேளையில் நாங்கள் புத்த பெருமானை மதிக்கின்றோம். அவருடைய பேரை பயன்படுத்தி செய்யும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முற்று முழுதாக எதிர்க்கின்றோம் என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரான சுகாஸும் சம்பவ இடத்துக்கு வந்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

நிலாவரை கிணறு அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக பகுதியிலே எவருக்கும் அறிவிக்காமல் தொல்லியல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மனித குலத்துக்கு விரோதமான செயல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நாம் கட்டமைக்கப்பட்ட இன வழிப்பின் ஒரு பகுதியாகவே பார்க்கிறோம் என்றார். (ம-ரி4,26)

## வடக்கில்...

தெரிவித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் கொழும்பு சென்று திரும்பியிருந்த நிலையில் அவர் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முகாமைத்துவ மாணவியாவார். இவர் மாத்தளையில் இருந்து கற்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். இவர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார் என்று கூறப்படுகின்றது. கிளிநொச்சி, பூநகரியில் மூவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் கொழும்பில் இருந்து வந்தவர்களாவர். அதேவேளை, வேறு மாகாணங்களில் இருந்து வருவோரைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவுக்கு அமைய நிறுத்தப்பட்டுள்ளன. இந்தநிலை யில் வேறு மாகாணங்களில் இருந்து திரும்பியோருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்ட விடயம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-26)

## எச்சில்...

துறை, அளுத்கமவில் இந்தச் சம்பவம் நடந்திருந்தது. அட்டுளுகமபிரதேசத்தில் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது இந்த நபருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. அதையடுத்து கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதி அவரைச் சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்வதற்காகப் பிரதேசத்துக்குப் பொறுப்பான சுகாதாரப் பரிசோதகர் அந்தப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தார். தன்னை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்து செல்ல வந்த அதிகாரிக்கு எதிர்ப்பு வெளியிட்ட அந்த நபர், "உங்களுக்கும் கொரோனாவைப் பரப்புகின்றேன்" என்று கூறி சுகாதாரப் பரிசோதகரின் முகத்தை நோக்கி உமிழ்ந்துள்ளார். அதையடுத்து அந்த நபருக்கு எதிராக பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

இவர் கொரோனாத் தடுப்புச் சட்டத்துக்கமைய சுகாதார அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறு விளைவித்தமை, சுகாதார ஒழுங்கு விதிகளை மீறியமை, அரச அதிகாரியின் உத்தரவை மதிக்காமை உள்ளிட்ட 8 குற்றச்சாட்டுகளில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 6 வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குற்றவாளி 10 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

## கடற்படை...

ணமான இலங்கைக் கடற்படையின் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்று தமிழகத்தில் வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் காணாமல் போயிருந்தனர். கோட்டைப்பட்டினம், இறங்குதுறையில் இருந்து மீன்பிடிக்காகப் புறப்பட்ட ஏ.மெசியா (வயது 30), வி.நாகராஜ் (வயது52), சாம்சன் டார்வின் (வயது28), எஸ்.செந்தில்குமார் (வயது32) ஆகிய நால்வருமே காணாமல் போன நால்வருமாவர்.

இவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த போது இலங்கைக் கடற்படையினரின் ரோந்துக் கப்பல் விசைப்படகுடன் மோதியதாலேயே ம்.அவர்கள் கடலில் மூழ்கிக் காணாமல் போயினர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

"இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 50 க்கும் மேற்பட்ட இந்திய றோலர் படகுகளில் வந்தோரை கைது செய்ய இலங்கைக் கடற்படையினர் முயன்றனர். எனினும் கைதாவதில் இருந்து மீனவர்கள் தப்ப முனைந்த போது ஒரு றோலர் படகு கடற்படையின் படகோடு மோதியது. பின்னர் படகுகோடு மீனவர்களும் கடலில் மூழ்கினர். அவர்களைக் கடற்படையினர் தேடினர். இதன்போது நேற்றுமுன்தினம் இருவரின் சடலங்களும், நேற்று எஞ்சிய இருவரின் சடலங்களும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீட்கப்பட்டன" என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர். மீட்கப்பட்ட நான்கு சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. சடலமாக மீட்கப்பட்ட சாம்சன் டார்வின் என்பவர் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர். இவர் போர்க் காலத்தில் இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து தமிழகம் சென்றவர் என்றும், கூலிக்காக மீன்பிடியில் ஈடுபடுபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, கடலில் இலங்கைக் கடற்படையினர் படகை வேண்டுமென்றே மோதி மூழ்கடித்து மீனவர்களைக் கொன்றனர் என்று குற்றஞ்சாட்டி நேற்று தமிழகம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோட்டைப்பட்டினத்தில் வீதி மறியல் போராட்டம் நடத்தப்பட்டது.

இலங்கைக் கடற்படையினர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். சடலங்களை வெளிப்படைத் தன்மையோடு உடற்கூற்றுப் பரிசோதனை செய்ய வேண்டும். இறந்த மீனவர்களின் குடும்பங்களில தலா ஒருவருக்கு அரச வேலை வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். மீனவர்கள் கடலில் பாதுகாப்பாக மீன்பிடிப்பதை இரு நாட்டு அரசுகளும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் நூற்றுக்கணக்கானவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்வரையில் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதில்லை என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர். (ப)

# இங்கிலாந்துக்கு பதிலடி கொடுக்குமா இலங்கை?



காலி, ஜன. 22

**இங்கிலாந்து இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகின்றது.**

இங்கிலாந்து இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகின்றது. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெறுமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. அதேநேரம் இலங்கையை அதன் மண்ணில் வைத்து வழித்துத் துடைக்கவும் இங்கிலாந்து கடும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

முன்னதாக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்று நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரை குறைந்த பட்சம் சமநிலையில் முடிக்கலாம் என்ற நெருக்கடிக்குள் இலங்கை அணி தள்ளப்பட்டுள்ளது.

சொந்த மண்ணில் வெள்ளையடிப்பைத் தவிர்க்க இலங்கை அணி கடுமையாகப் போராட வேண்டும் என்ற கௌரவச் சிக்கலும் அந்த அணிக்கு ஏற்பட்டுள்ளது. (ம)

## களத்தில் அண்டர்சன்: புரோட் கட்டாய ஓய்வு



காலி, ஜன. 22

இலங்கை அணிக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்து அணியில் அண்டர்சன் களமிறக்கப்படுகின்றார்.

முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் புரோட் விளையாடியிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்தில் அவருக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு அண்டர்சன் களமிறக்கப்படுகின்றார்.

இலங்கை அணிக்கு எதிரான தொடரைத் தொடர்ந்து இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு எதிராக விளையாடவுள்ளது. இந்தத் தொடரில் புரோட்டின் உடற்தகுதியைக் கருத்தில்கொண்டே அவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. (ம)

**விற்பனைக்கு**

நெல் அறுவடை செய்யும் இயந்திரம்
(Harvestar) 70 G Kuvota
விற்பனைக்குண்டு.
077 960 2763

## தவறான கணிப்புக்காக வெட்கப்படுகிறேன் நான்

### மைக்கல் வாகன் ஒப்புதல்



லண்டன், ஜன. 22

இந்திய அணி ஆஸ்திரேலிய அணியிடம் 4:0 என டெஸ்ட் தொடரை இழக்கும் என தவறாகக் கணித்துவிட்டேன் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வாகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடிலெய்டில் இந்திய அணி 36 ஓட்டங்களில் சுருண்டு 8 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தபின் இந்திய அணியைப் பற்றித் தவறாகக் கணித்தேன். இந்திய அணியை அதிகமாக விரும்பும் ரசிகர்கள்கூட இந்திய அணி மீண்டுவரும் என நம்பவில்லை. ஆனால், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி வென்று என் கணிப்பை தவறாக்கி விட்டது. இப்போது நான் வெட்கப்படுகிறேன். நான் கணித்தது தவறு எனச் சொல்வதில் தயக்கம் இல்லை.

ஆஸ்திரேலியாவிடம் ஏதோ தவறு இருக்கிறது என்பதையும் சொல்ல வேண்டும். சிமித், லபுஸ்சேன் இருவரும் துடுப்பாட்டத்தில் மென்மையான போக்கைக் கடைப்பிடித்தார்கள். ஆக்ரோசத்தைக் காட்டவில்லை. பந்துவீச்சைப் பொறுத்தவரை இந்திய அணிக்கு எதிராக கடந்த 3 டெஸ்ட் போட்டிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையவில்லை. குறிப்பாக லையனின் பந்துவீச்சு எடுபடவேயில்லை. பெய்னின் தலைமைத்துவம் எந்த விதத்திலும் ஆஸ்திரேலியாவுக்கு உதவவில்லை - என்றார். (ம)

## பலமற்ற மேற்கிந்தியத் தீவுகளை பந்தாடியது பங்களாதேஷ் அணி!



டாக்கா, ஜன. 22

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றது. பலமற்ற அணியாக களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளை பங்களாதேஷ் துவம்சம் செய்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அனுபவ வீரர்கள் எவரும் இல்லாத மேற்கிந்தியத் தீவுகள் அணி 122 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கைல் மயர்ஸ் 40 ஓட்டங்களைப் பெற்றார். சகிப் அல் ஹசன் 7.2 பந்துப்பரிமாற்றங்களில் 8 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 4 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

(ம)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராச வீதியில் ராசவீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.
தொடர்பு - குரு
077 468 3354,077 805 1655

**பணியாளர் தேவை**

யாழ்நகரில் இயங்கும் பிரபல
நகை காட்சியறைக்கு அனுபவம் உள்ள
நகை விற்பனையாளர் மற்றும்
கல்வியறிவு உடைய கணக்கு எழுதக்கூடிய வியாபாரம் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தகுதிக் கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு:
இன்று தொடக்கம் 22, 23, 25, 26 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிமுதல் 11.30 மணிக்குள் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

சந்தோஷ் ஜ்வலர்ஸ்
இல.97 A, 99B மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**பதவி வெற்றிடம்**

- வரவேற்பாளர்கள்
- இயந்திர இயக்குநர்கள்

யாழ் நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு வரவேற்பாளர்கள் (ஆண்/பெண்) மற்றும் இயந்திர இயக்குநர்கள் தேவை.
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.



நேர்முகத் தேர்வு: 25.01.2021 திங்கட்கிழமை,
மு.ப. 9.00- 1.00 மணிவரை
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

ES பிறின்ரர்ஸ்
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

*கார்- பஸ்...*

இந்த விபத்து நேற்று இரவு 11.30 மணியளவில் நடந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பஸ்ஸும், யாழ்ப்பாணம் நகர் நோக்கி வந்த காருமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் கார் கடுமையாகச் சேதமடைந்துள்ளது. விபத்தை அடுத்து பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள திருத்தகம் ஒன்றுக்குள் புகுந்துள்ளது. வீதியில் நின்ற ஒருவர் மற்றும் கார் சாரதி, பஸ் சாரதி ஆகியோரே காயங்களுக்குள்ளாகியுள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(எரி4)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.